Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா [illegible]

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

**INTERNET BROWSING**

உங்கள் கனவுகளை நனவாக்கும் விதத்தில் (Global Informatics) நிறுவனத்தின் மிகக்குறைந்த கட்டணத்தில் 1 hour - 50/= உங்கள் இணையத்தளத் தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்ளமுடியும் என்பதை அறியத்தருவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

gi@netcafe

Internet Browsing Center

Global Informatics (pte) Ltd.
379, Kasthuriyar Road, Jaffna.
Tel - 077 7364247, 021 222 5735-6

(சி-918)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 வைகாசி 12 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ர.அவ்வல் 23 (26.05.2003) திங்கட்கிழமை இதழ்: 234

## உதவிப் பொருட்கள் அவசியமல்ல; நீங்கள் வந்ததே பெரிய விடயம்!

### புலிகளிடம் தென்பகுதி மக்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

தென்பகுதியில் வெள்ளம், மண்சரிவுகளால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான உதவிப் பொருட்களுடன் சென்ற தமக்கு, சிங்கள மக்கள் பெரும் வரவேற்பு அளித்ததாக விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியற்றுறைப் பொறுப்பாளர் எழிலன் நமது ஈழநாட்டுக்கு நேற்றிரவு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், எம்மைச் சந்திக்கும் சிங்கள மக்கள் தமது மன நிறைவைத் தெரிவிக்கின்றனர். உதவிப் பொருட்கள் கொண்டுவந்து தரவேண்டுமென்பதில்லை நீங்கள் வந்ததே பெரிய செய்தி என்று அவர்கள் கூறுகின்றனர்.

தென்னிலங்கை மக்களுக்கும் வடபகுதி மக்களுக்கும் இடையிலான சகோதர உறவை வளர்க்க வேண்டும் என்று அவர்கள் ஆவலாக உள்ளனர். அரசாங்கமும், தென்னிலங்கை அரசியலும்தான் குழப்பம் விளைவிப்பதாக சிங்கள மக்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். இதனைத்தான் நாங்களும் வலியுறுத்தினோம்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தென்பகுதி மக்களிடம் புலிகளுக்கு எதிர்பார்த்ததைவிட அதிக வரவேற்பு

### அமைச்சர் சந்திரசேகரன் நமது ஈழநாட்டுக்குப் பேட்டி

(நமது நிருபர்)

தென்பகுதிக்கு உதவிப் பொருட்களுடன் வந்துள்ள விடுதலைப் புலிகளுக்கு - எதிர்பார்க்கப்பட்டதைவிட சிங்கள மக்கள் மத்தியில் பெரியளவிலான வரவேற்புக் கிடைத்திருப்பதாக மலையக மக்கள் முன்னணித் தலைவரும், அமைச்சருமான பெ.சந்திரசேகரன் தெரிவித்தார்.

நமது ஈழநாட்டுக்கு அமைச்சர் சந்திரசேகரன் அளித்த விசேட பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது -

உதவிப்பொருட்களுடன் வந்த புலிகள் இப்போது மலையகப் பகுதிகளுக்கு விஜயம் செய்துவருகின்றனர். நேற்று தலவாக்கெல்லைப் பகுதிக்கு விஜயம்செய்த புலிகள், இன்று கொட்டகலை, ஹட்டன் ஆகிய பகுதிகளுக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

வட - கிழக்குப் பகுதிக்கும் மலையகத்துக்கும் உறவுப்பாலம் அமைக்க வேண்டும். இதன் மூலமே பரஸ்பர ஒத்துழைப்பை இருதரப்பும் மேற்கொள்ளவேண்டும்.

தமிழ்மக்கள் அனைவரும் ஒற்றுமைப்படுவதற்கு இது ஒரு முன்முயற்சியாக அமைய வேண்டும். உலக (10 ஆம் பக்கம் பார்க்க)

# சொல்ஹெய்ம் கொழும்பு வந்தார்; வன்னிக்கும் விரைவில் விஜயம்!

## இணக்கத்திற்கு தீவிரமாக முயற்சி

(கொழும்பு)

**நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் நேற்றுக் காலை மீண்டும் கொழும்பு வந்து சேர்ந்தார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் உடனடியாகவே பேச்சுக்களை ஆரம்பித்த இவர், மிக விரைவில் வன்னிக்குச் சென்று விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தவுள்ளதாகத் தெரியவருகிறது.**

எதிர்வரும் ஜூன் 9ஆம், 10ஆம் திகதிகளில் ரோக்கியோவில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் புலிகளைக் கலந்துகொள்ளவைப்பதற்கான இறுதிக்கட்ட முயற்சிகளில் நோர்வே தீவிரமாக ஈடுபட்டிருக்கிறது.

இந்த மாநாட்டில் பங்குபற்றுவதாயின், வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்று தோற்றுவிக்கப்பட வேண்டும் எனப் புலிகள் அறிவித்திருந்தனர்.

புலிகளின் இந்தக் கோரிக்கை தொடர்பாக அரசாங்கத்திடம் இருந்து இதுவரை பதில் எதுவும் அனுப்பப்படவில்லை. இந்த நிலையிலேயே நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் நேற்றுக் காலை திடீரென கொழும்பு வந்து சேர்ந்தார்.


(10 ஆம் பக்கம் பார்க்க)

**அரசின் பதில்**

**இன்று அல்லது நாளை**

## இடைக்கால நிர்வாகம் தொடர்பாக

## கோட்டை உயர்பாதுகாப்பு வலயத்தில் தென்மாகாண அமைச்சர் படுகொலை!



## இடைக்கால நிர்வாகம் தொடர்பாக

# ஜனாதிபதி சந்திரிகாவை பிரதமர் சந்தித்து பேசுவார்!

வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகம் நிறுவப்பட வேண்டும் என்ற விடுதலைப் புலிகளின் கோரிக்கை தொடர்பாக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாளை மறுநாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

விடுதலைப் புலிகளின் கோரிக்கை தொடர்பாகத் தனது ஆலோசகர்கள், சிரேஷ்ட அமைச்சர்கள் சிலருடன் ஆலோசனை நடத்தியுள்ள பிரதமர், சட்டமா அதிபர் கே.சி.கமலசபேசனுடனும் சட்ட ஆலோசனை நடாத்தி வருகிறார்.

விடுதலைப் புலிகளின் இந்தக் கோரிக்கைகளுக்கு கடிதம் மூலம் பதிலளிப்பதற்கு முன்னர், ஜனாதிபதியுடன் ஆராய (10ஆம் பக்கம் பார்க்க)

# இடைக்கால நிர்வாகக் கோரிக்கைக்கு அமைச்சர் தொண்டமானும் ஆதரவு!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகப் பிரேரணைக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தமது முழுமையான ஆதரவை வழங்கும் என காங்கிரசின் தலைவரும் அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்றுக்காலை நடைபெற்ற காங்கிரசின் நிர்வாக உத்தியோகத்தர் கூட்டத்தில் பேசும்போதே, அவர் இதனைக் கூறியதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு தொடர்ந்து பேசிய அமைச்சர், இடைக்கால நிர்வாகம் ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும். அதில், புலிகள் பங்கேற்க வேண்டும் என

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் பதில் இன்று அல்லது நாளை

(கொழும்பு)

இடைக்கால நிர்வாகம் தொடர்பான புலிகளின் கடிதத்துக்கான, அரசாங்கத்தின் பதில் இன்று அல்லது நாளை அனுப்பிவைக்கப்படும் என்று அரசின் சமாதானச் செயலகச் செயலாளர், பேணாட் குணதிலக தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் பதில் குறித்து மேலதிக தகவல்களை வெளியிட

(10 ஆம் பக்கம் பார்க்க)



(கொழும்பு)

கொழும்பு - கோட்டைப் பகுதியிலுள்ள உயர் பாதுகாப்பு வலயத்தினுள் வைத்து, தென் மாகாணசபை அமைச்சர் ஒருவர், நேற்று இனந்தெரியாத ஆயுதபாணிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்றுக்காலை 10 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த தென் மாகாணசபை அமைச்சர் எம்.கே.ரஞ்சித் என்பவரே கொல்லப்பட்டவராவார்.

'சந்தி மல்லி' எனப்படும் இவர் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் நெருங்கிய சகா எனத் தெரியவருகிறது.

கோட்டைப் பகுதியிலுள்ள குற்றப் புலனாய்வு அலுவலகத்திற்குச் சென்றுவிட்டு திரும்பிக்கொண்டிருந்த இவரை வழிமறித்த ஆயுதக் குழுவினர், மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்தில் அந்த இடத்திலேயே

(10 ஆம் பக்கம் பார்க்க)

# ஹையேஸ் வானில் வந்தவர்களால் வடமராட்சியில் இளைஞன் கடத்தல்!

## -விளையாட்டு மைதானத்தில் நடந்த பரபரப்புச் சம்பவம்-

(வடமராட்சி)

யாழ். பல்கலைக்கழக மீன்பிடியியல் டிப்ளோமா மாணவன் ஒருவர், இனந்தெரியாதோரால் ஹையேஸ் வானில் கடத்தப்பட்டதாகத் தெரியவருகிறது. நேற்று முன்தினம் பொலிகண்டி மேற்கில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வல்வெட்டித்துறை மத்தி கிராம அலுவலரின் மகனான சிவபாலசிங்கம் சரவணன் (வயது 21) என்பவரே கடத்திச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொலிகண்டி மேற்கிலுள்ள விளையாட்டு மைதானத்தில் இளைஞர்களுக்கு உதைபந்தாட்டப் பயிற்சி வழங்கிக்கொண்டிருந்த வேளை, ஹையேஸ் வானில் வந்த சிலர் இவரை மடக்கிப் பிடித்து வானில் ஏற்றிச் சென்றதாக சம்பவத்தை நேரில்கண்ட மக்கள் தெரிவித்தனர்.

மேற்படி இளைஞனைப் பிடிப்பதற்கு முன்பதாக ஹையேஸ் வான் அப்பகுதியில் பல தடவை சுற்றித் திரிந்ததாகவும், அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

EXPO Aviation
எக்ஸ்போ
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 071 349999
071 348888 074 ~ 512666 ~ 01 ~ 360290

(சி -913)

# மீண்டும் மரண தண்டனைச் சட்டம்; சர்வதேச சட்டங்களை மீறும் செயல்!

## மனிதஉரிமை ஆணைக்குழு குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையில் அமுலுக்கு கொண்டுவரப்படவுள்ள மரண தண்டணைச்சட்டம் சர்வதேச சட்டங்களை மீறுவதாக உள்ளது என, இலங்கை மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கும் கலாநிதி ராதிகா குமாரசாமி இதுகுறித்து உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில் -

இலங்கையில் மீண்டும் மரண தண்டனையை அமுலுக்குக் கொண்டுவர எடுக்கப்படும் முயற்சிகள், சர்வதேசக் கட்டுப்பாடுகளை மீறுவதாக அமைவதுடன், மனிதனின் வாழ்வதற்கான உரிமையும் பாதிக்கப்படுகின்றது.

இந்தச் சட்டம் அமுலுக்கு வந்தால், குற்றம் புரியாத ஒருவர்கூட நீதித்துறையால் தண்டிக்கப்படும் நிலை உருவாகலாம். குற்றச்செயல்கள் அதிகரிப்பதற்குக் காரணங்காட்டி, மரண தண்டணை முறையை மீள அமுல்படுத்துவதாக அரசாங்கம் கூறுகின்றது. வேறெந்த நாட்டிலும் இப்படி நடக்கவில்லை.

குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த தனது கடமைகளை அரசு வலுப்படுத்தவேண்டும்.

இப்போதுதான் மனிதஉரிமை விவகாரங்கள் தொடர்பாக இலங்கை மீது குற்றச்சாட்டுக்கள் குறைந்துள்ளநிலையில், மரணதண்டணையை அமுல்படுத்தினால் மீண்டும் அத்தகைய குற்றச்சாட்டுக்கு உட்படவேண்டும் என்றும் மனிதஉரிமை ஆணைக்குழு எச்சரித்துள்ளது.

# பேராதனைப் பல்கலை மாணவர்கள் உயர்தர விடைத்தாளை சேதமாக்கினர்

## கல்வி அமைச்சர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பேராதனை - எலதெனிய என்ற இடத்தில், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக் கட்டடத்தில் பலவந்தமாகத் தங்கியுள்ள பல்கலைக்கழக மாணவர்கள், கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள்கள் பலவற்றைச் சேதமாக்கியுள்ளதாகக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அந்த ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, விடைத்தாள்களை மதிப்பிடும் நிலையமாகச் செயற்பட்டுவருகின்றது. பேராதனைப் பல்கலைக்கழக பட்டதாரி மாணவர்களும் இக்கட்டடத்தில் தங்கியுள்ளனர்.

சட்டவிரோதமாக அங்கு தங்கியிருக்கும் மாணவர்களை, எத்தகைய பலப்பிரயோகமும் மேற்கொள்ளாமல் வெளியேற்றும்படி - கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு பொலிஸாரிடம் கேட்டுள்ளார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விடுதி வழங்கப்படாததால், இம் மாணவர்கள் இந்த ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பலவந்தமாகத் தங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# குடாநாட்டில் வெப்பக்காற்று; நோய்கள் பரவுகின்றன!

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் வீசும் வெப்பக் காற்றுக் காரணமாக, பல்வேறு நோய்கள் பரவிவருகின்றன.

அண்மைக்காலமாக வெப்பக் காற்று தொடர்ந்து வீசிவருவதனால் - பரவலாகக் கண்நோய், சின்னமுத்து, காய்ச்சல், வயிற்றோட்டம் போன்ற நோய்கள் இலகுவில் பரவுகின்றன.

இதேவேளையில், கடும் வெப்பம் காரணமாக குளங்கள், வடிகால்கள் என்பவற்றிலிருந்து எழும் துர்வாடை காரணமாக, நோய்கள் பரவக் கூடிய சாத்தியக்கூறு அதிகரித்துள்ளதோடு சில இடங்களில் கிணறுகளில் நீர் மட்டம் குறைந்தும் செல்கின்றது.

(சு)

# ஆசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பில் இன்று சந்திக்கின்றனர்!

## மூன்று நாட்கள் மாநாடு நடக்கும்

ஆசியப் பிராந்திய நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களும், அதிகாரிகளும் கலந்துகொள்ளும் மாநாடு, இன்று கொழும்பில் ஆரம்பமாகின்றது. சர்வதேச நாடாளுமன்றச் சங்கம், உலகவங்கி, ஐக்கிய நாடுகள் நிகழ்ச்சித் திட்டம் ஆகியவற்றின் பங்களிப்புடன் இந்த மாநாடு நடைபெறுகின்றது.

இந்தியா, பாகிஸ்தான், ஈரான், கம்போடியா உட்பட பல நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளனர்.

சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேராவின் ஏற்பாட்டில் இந்த மாநாடு மூன்று தினங்கள் இடம்பெறும்.

நாடாளுமன்றத்தின் வரவு, செலவுத் திட்டத்தை தயாரிப்பது, தெரிவுக்குழு, விவாதங்களின்போது நடந்துகொள்ளும் முறை, அமைச்சுகளின் செலவீனங்களைக் கட்டுப்படுத்துவது உட்படப் பல விடயங்கள் இம்மாநாட்டில் கவனத்திற்கொள்ளப்படும் எனத் தெரிகிறது.

# ரோக்கியோ மாநாட்டுக்கு முன்பாக சட்டபூர்வ நிதி நிர்வாகக் கட்டமைப்பு!

## அரசாங்க பொது ஊழியர் சங்கம் கோரிக்கை

ரோக்கியோ மாநாட்டுக்கு முன்பாக, வடக்கு - கிழக்கில் சட்டபூர்வமாக நிதி நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கி, அதனை விடுதலைப் புலிகளிடம் கையளிக்கவேண்டும். இவ்வாறு, அகில இலங்கை அரசாங்க பொதுஊழியர் சங்கத் தலைவரும், வடமாகாண ஜீவவோதய நலன்புரித் தலைவருமான எஸ்.லோகநாதன் கல்முனையில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

அவர், அங்கு தொடர்ந்து கருத்து வெளியிடுகையில்,

சமாதானப் பேச்சுவார்த்தையை உடனடியாக ஆரம்பிப்பத்றகு தடையாகவுள்ள காரணங்களை இனங்கண்டு, அவற்றினை இல்லாது செய்வதன் மூலம், நாட்டில் மீண்டுமொரு யுத்தம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியும். யுத்தத்துக்குத் தீர்வு - யுத்தமாகாது. எனவே, இடைநிறுத்தப்பட்டுள்ள பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிக்கச் செய்ய வேண்டும். அதேவேளையில், புரிந்துணர்வு உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ள விடயங்களை அரசாங்கம் உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

இலங்கைக்கு வரும் வெளிநாட்டவர்கள் ஏன் பிரபாகரனைச் சந்திக்க வேண்டும் என்று, குரல் எழுப்பிவரும் சிங்கள இனவாதிகள் - இந்த நாட்டில் மீண்டும் யுத்தம் ஏற்பட்டு, நாட்டினை இரத்தக்களரியாக்கவா விரும்புகின்றனர்?

வட-கிழக்கு மாகாணத்தில் அர்த்தபுஷ்டியான அபிவிருத்தி நிகழ வேண்டுமானால், தமிழர்-முஸ்லிம்கள் மத்தியில் பரஸ்பரம் புரிந்துணர்வு இருக்க வேண்டும். தமிழர்-முஸ்லிம்கள் உறவினை திட்டமிட்ட வகையில், சிலர் குழப்பி வருகின்றார்கள், இதனைப் புலிகள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்கள் என்றார்.

### யாழ். நகரப்பகுதியில் திருட்டுக்கள் அதிகரிப்பு

யாழ். - கண்டி வீதி திறக்கப்பட்டதன் பின்னர், குடாநாட்டில் திருட்டுச்சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

யாழ். நகரப்பகுதிகளில் நடமாடும் திருடர்கள், பொதுமக்களின் பெறுமதியான பொருட்களை சூறையாடும் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளன.

இவ்வாறான திருட்டுச்சம்பவங்கள் தொடர்பாக, யாழ். பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்புப் பிரிவில் ஒரு நாளைக்கு குறைந்தது ஐந்து முறைப்பாடுகளாவது பதியப்படுவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (சு)

# ஜொலி ஸ்ரார் கிண்ணத்தை யங் ஸ்ரார் கழகம் வென்றது

ஜொலி ஸ்ரார் வெற்றிக் கிண்ணத்துக்காக, ஜொலி ஸ்ரார் விளையாட்டுக்கழகம் - ஈ.எஸ். பேரம்பலம் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடாத்திய, மட்டுப்படுத்தப்பட்ட 40 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் நேற்றையதினம் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில்- பற்றீசியன், யங் ஸ்ரார் ஆகிய விளையாட்டுக் கழகங்கள் மோதிக்கொண்டன.

முன்னதாக, நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பற்றீசியன் அணி முதலில் துடுப்பெடுத்தாடி, 27.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றது.

147 ஓட்டங்கள் பெற்றால், வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யங் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் - 32 ஓவரில், ஆறு விக்கெட்டுக்களை இழந்து 147 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது.

நேற்றைய போட்டியில் - பற்றீசியன் சார்பில், அன்ரன் நயினார் 41 ஓட்டங்களையும், வினோதன் 21 ஓட்டங்களையும்,

பந்துவீச்சில் யங் ஸ்ரார் சார்பில் சசிவர்மன் - 4.1 ஓவர் பந்துவீசி 9 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும், ஜொனிற்றன் - 6 ஓவர் பந்துவீசி, 24 ஓட்டங்களைக் கொடுத்து, 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

யங் ஸ்ரார் சார்பில் விஜயகர்ணன் ஆட்டமிழக்காமல் 47 ஓட்டங்களைப் பெற்றார்.

இவ்வாட்டத்தில், சிறப்பாட்டக்காரராகவும், சிறந்த பந்து வீச்சாளராகவும் ஐ.சசிவர்ணனும் (யங் ஸ்ரார்), சிறந்த துடுப்பாட்ட வீரனாக விஜயகர்ணனும் (யங் ஸ்ரார்), சிறந்த களத் தடுப்பாட்டளராக ஆர்.சாஜகானும் (யங் ஸ்ரார்) தெரிவுசெய்யப்பட்டனர்.

இந்தப்போட்டியை பெருந்திரளான மக்கள் திரண்டிருந்து பார்வையிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ச,ரா)

# பொ.ஐ.முவின் செயலாளர் பதவியை ஜே.வி.பி கேட்டதால் முறுகல்நிலை!

பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து செயற்படவேண்டுமானால், தமது கட்சியைச் சேர்ந்த ஒருவருக்குப் பொதுச்செயலாளர் பதவி தரப்படவேண்டும் என்று- ஜே.வி.பி கேட்டுள்ளது.

ஜே.வி.பியின் இந்தக் கோரிக்கைக்கு சிறீலங்கா சுதந்திரக் கட்சி மறுப்புத் தெரிவித்துள்ளதால் இருகட்சிகளுக்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் பதவியைதான் ஒருபோதும் விட்டுக்கொடுக்க முடியாது என சுதந்திரக் கட்சியின் தலைவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளர் பதவி மிகவும் முக்கியமானது. அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த இப்பதவியில் இருப்பவர்தான், தேர்தல் ஆணையாளருடனான தொடர்புகளைப் பேணுவார்.

இதனால், இப்பதவியை வேறு எவருக்கும் விட்டுக்கொடுக்க முடியாது. இந்தப் பிரச்சினை குறித்து ஜே.வி.பிக்கும் சுதந்திரக் கட்சிக்குமிடையில் நாளை நடக்கவுள்ள பேச்சுக்களில் ஆராயப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் பதவியை ஜே.வி.பி கோரியதாக வெளியான செய்திகளை ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச மறுத்துள்ளார்.

ஆனால், அதிகாரமுள்ள பங்கைத் தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


இதனிடையே, இந்தச் சிக்கல்கள் குறித்து ஜனாதிபதி சந்திரிகா எந்தக்கருத்தையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க, சுதந்திரக் கட்சியுடன் கூட்டமைப்பை அமைக்க முடிவு செய்துள்ள ஜே.வி.பி, இரு கட்சிகளும் இணைந்து ஆட்சியமைத்தால், தமக்கு இரு அமைச்சர் பதவிகளை வழங்கவேண்டும் எனக் கேட்டுள்ளது.

ஊடகத்துறை அமைச்சும், விவசாய அமைச்சும் தமக்குத் தரப்படவேண்டும் என ஜே.வி.பி. கோரியுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்களான அனுரா திசநாயக்க, விமல் வீரவன்ச ஆகியோருக்கே இப்பதவிகளை வழங்க ஜே.வி.பி. கேட்டுள்ளது.

மூத்த கலைஞர், நாட்டுப்பற்றாளர் அமரர் V.T.A விஸ்வா நினைவாக
புலிகளின் குரலின் சிறப்பு முத்தமிழ்க் கலையரங்கம்.
இடம்- யாழ். பல்கலைக்கழக கையாலசபதி கலையரங்கு
காலம்- 26-05-2003
நேரம் - மாலை 4.00 மணி
முத்தமிழ் கலையரங்கில் முகிழ்பவை
மாவீரர் வணக்க நடனம் - திருமதி ஆனந்தஜோதி தர்ஷனின் நெறியாள்கை
வரவேற்புரை
சிறப்புரை
நினைவுரை
இறுவட்டு வெளியீடு
நாட்டுப்பற்றாளர் மூத்தகலைஞர்.
'V.T.விஸ்வாவின் நினைவலைகள்'
வெளியீட்டுரை
கவியரங்கம் - 'மண்ணும் மனிதமும்'
நாட்டுக்கூத்து - 'பண்டாரவன்னியன்.'
முள்ளியவளை. அ.த.க. பாடசாலை மாணவர்கள்
நெறியாள்கை - என். எஸ்மணியம்
நன்றியுரை
அன்பு நேயர்கள், ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
புகளின் குரல் நிறுவனம்,
தமிழிழம்.
(சி-955)

ராஜா யாழ்ப்பாணம்.
3 வது வாரம்
இளைய தளபதி விஜய், மீராஜஸ்மின், கருணாஸ்



புதிய கீதை
தினசரி 10.30, 2.30, 6.30
சனி, ஞாயிறு 10.30, 2.30, 6.30, 9.30
(சி-883)

நிறஞ்சனாஸ் சங்கானை.
இன்று முதல்
எம்.ஜி.ஆர்., நாகேஷ், ஜெயலலிதா, வீ.கே.ராமசாமி
இரகசியப் பொலீஸ் -115
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு
CASTAWAY (இரவு 8.45)
(சி-832)

# தென்பகுதி மக்களுக்கு புலிகள் நேசக்கரம்!

## வரவேற்கிறார் அமைச்சர் இம்தியாஸ்



(கொழும்பு)

வெள்ளம் மற்றும் மண்சரிவுகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விடுதலைப் புலிகள் நிவாரணப் பொருட்களை வழங்கி உதவியிருப்பதற்குத் தொடர்புசாதன அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் பாராட்டும், மகிழ்ச்சியும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

இருபது ஆண்டுகளாக அரச படைகளுடன் மோதிய விடுதலைப் புலிகள் தென்னிலங்கை மக்களுக்கு நேசக்கரம் நீட்டும் சூழலுக்கு வந்துள்ளமை வரவேற்புக்குரியதொரு நிகழ்வு என்றும் குறிப்பிட்டார்.

# இயற்கை அனர்த்தங்களினால் 1500 கோடி ரூபாவுக்கு மேல் இழப்பு

## மேலும் அதிகரிக்கலாம் எனவும் தகவல்

(கொழும்பு)

வெள்ளம் மற்றும் மண்சரிவு போன்ற இயற்கை அழிவுகளால் தென்பகுதியில் அண்மையில் ஏற்பட்ட இழப்புக்களின் பெறுமதி ஆயிரத்து ஐந்நூறு கோடி ரூபாவுக்கும் அதிகமாக இருக்கும் என்று முதற்கட்ட மதிப்பீடுகளிலிருந்து தெரியவந்துள்ளது.

வீடுகள் அழிவு மற்றும் சொத்துக்கள், தொழில் முயற்சிகளுக்கு ஏற்பட்ட அழிவுகள் தொடர்பாக புள்ளி விபரங்களைத் திரட்டும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. சுமார் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட சுயதொழிலை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

மூவாயிரத்துக்கும் மேற்பட்ட கால்நடைகளும் வெள்ளம் மற்றும் மண்சரிவுக்குப் பலியாகியிருக்கின்றன.

இந்தவகையில், இதுவரை திரட்டப்பட்ட தகவல்களின் அடிப்படையில் 1500 கோடி ரூபாவுக்கு மேல் இழப்புக்கள் ஏற்பட்டிருப்பது தெரியவந்துள்ளது. ஆனால், சுயாதீன மதிப்பீடுகள் சுமார் 2500 கோடி ரூபாய் வரை இழப்பு ஏற்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கின்றன.

# உணவுப் பொருட்கள் அனுப்பியதற்கு பிரபாவுக்கு நன்றி கூறவேண்டும்!

## களுத்துறை விகாராதிபதி அல்வத்துரே அஸ்ஸாஜி தேரர்

இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு விடுதலைப் புலிகள் நிவாரணப் பொருட்களை எடுத்து வந்தமைக்காக முதலில் பிரபாகரனுக்கு நன்றி கூறவேண்டும் என்று, களுத்துறை மாவட்ட போம்புவல மங்கடகல விகாராதிபதி அல்வத்துரே அஸ்ஸாஜி தேரர் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளால் வழங்கப்பட்ட நிவாரணப் பொருட்களைப் பெற்றுக்கொண்டு உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

சிறுபான்மையினரின் உரிமைகள் பற்றிச் சுயலாபத்துக்காகச் செயற்படும் அரசியல்வாதிகளிடம் பேசுவதைவிட, மக்களுடன் ஒன்றாக இணைந்து செயற்படும் மத ஸ்தாபனங்களிடம் இந்தச்செய்தி கொண்டுசெல்லப்பட வேண்டும்.

நாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள சமாதான முயற்சிகளில் அரசியல்வாதிகளை மட்டும் இணைத்துக்கொண்டு செயற்படாமல், மக்களுடன் ஒன்றிணைந்து வாழும் மதத் தலைவர்களையும் இணைத்துக் கொள்ளவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.



அண்மையில் நடைபெற்ற இளவாலை புனித யூதா ததேயு முன்பள்ளி விளையாட்டு விழாவில், உடற்பயிற்சி கண்காட்சியில் பங்குபற்றிய சிறுவர்களைப் படத்தில் காணலாம். (71)

# தரவைக்குளம் ராணுவ முகாம் தாக்குதல் நினைவு நாள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தரவைக்குளம் இராணுவ முகாம் மீதான தாக்குதலின் எட்டாவது ஆண்டு நிறைவை நாளை பெரியளவில் அனுஷ்டிக்க விடுதலைப் புலிகள் ஏற்பாடுகளைச் செய்துவருகின்றனர்.

1995ம் ஆண்டு மே 27 ஆம் திகதி தரவைக்குளத்தில் இருந்த இராணுவ முகாம் மீது புலிகள் தாக்குதல் நடத்தி அதை முற்றாக அழித்தனர். இந்தத் தாக்குதலில் லெப்.கேணல் வினோதன் உட்பட 18 புலிகள் வீரச்சாவடைந்திருந்தனர்.

இந்தத் தாக்குதலின் எட்டாவது வருட நிறைவையொட்டியே நாளை தரவைக் குளத்தில் பெரியளவிலான நிகழ்வுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தாக்கியழிக்கப்பட்ட தரவைக்குளம் இராணுவ முகாம் பகுதியிலேயே விடுதலைப்புலிகளின் கிழக்குப்பகுதி இராணுவப் பிரிவுத் தலைமையகம் தற்போது இயங்கிவருவதாகக் கூறப்படுகிறது.

நாளை தரவைக்குளத்தில் இடம்பெறவுள்ள நிகழ்வுகளில் வினோதன் படையணியின் அணிவகுப்பும் இடம்பெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வுகளில் விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதிகள், பொறுப்பாளர்கள், பொதுமக்கள் கலந்துகொள்ளவுள்ளதாகத் தெரியவருகிறது.

### அவுஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சருடன் பேச்சு

(கொழும்பு)

வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொள்ளும்அவுஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர், இன்று சில மணி நேரம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தங்கிச்செல்லும்போது, இலங்கை வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் அவருடன் பேச்சுக்களை நடத்தவுள்ளனர்.

### ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

(சாவகச்சேரி)

நெடுந்தீவு பிரதேச செயலக மாதாந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை- செயலக மண்டபத்தில், உதவி அரசாங்க அதிபர் ச.பேரானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

# தமிழ்க் கைதிகள் ஐவர் களுத்துறையில் விடுதலை

(கொழும்பு)

களுத்துறைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஐந்து தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்தவாரம் தமிழ் அரசியல் கைதிகள் மேற்கொண்ட உண்ணாவிரதப் போராட்டத்தையடுத்து, இவர்கள் விடுதலை செய்யப்பட்டதாகத் தெரியவருகின்றது.

களுத்துறைச் சிறைச்சாலையில் இன்னும் 60 தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. (01)

# மண் சரிவு அபாயமுள்ள 50 இடங்கள் கண்டறிவு

(கொழும்பு)

மண்சரிவு ஏற்படக்கூடிய, அபாயத்தை எதிர்நோக்கி உள்ள சுமார் 50 இடங்கள், புவியியல் விஞ்ஞானிகளால் இனம் காணப்பட்டு, ஜனாதிபதி செயலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மண்சரிவு அபாயம் தொடர்பாக - மொறட்டுவ, பேராதனைப் பல்கலைக்கழக குழுக்கள், இந்த ஆய்வுகளை மேற்கொண்டுவருவதாகவும் ஜனாதிபதி செயலகம் கூறுகின்றது.

இதேவேளை - வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளைப் புனரமைக்க, ஜனாதிபதி நிதியத்திலிருந்து, 100 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# பயிற்சி, தகவல் பரிமாற்றத்துக்கு உதவ தாய்லாந்து கடற்படைத் தளபதி இணக்கம்!

## வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி தகவல்

இலங்கைக் கடற்படைக்குப் பயிற்சிகளை வழங்குவதற்கும், தகவல் பரிமாற்ற ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கும் - தாய்லாந்துக் கடற்படைத் தளபதி உறுதியளித்திருப்பதாக, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி தெரிவித்தார்.

தாய்லாந்துக் கடற்படைத் தளபதி நவேக் சோமபா ஐந்து நாள் விஜயமாக கொழும்பு வந்துள்ளார். இவருடன் நீண்ட பேச்சுக்களை நடத்திய பின்னர், செய்தியாளர்களிடம் பேசியபோதே, சந்தகிரி இவ்வாறு குறிப்பிட்டார்.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்புத் தொடர்புகள் குறித்து அதிக ஈடுபாடு காட்டுவதற்கும், அவசர உதவிகளை வழங்குவதற்கும் தாய்லாந்து தயாராக இருப்பதாக அந்நாட்டுக் கடற்படைத் தளபதி தமக்குத் தெரிவித்ததாகவும், வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி தெரிவித்தார்.

கடற்படைத் தலைமையகத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போது, தாய்லாந்துக் கடற்படைத் தளபதி - தயா சந்தகிரிக்கு பத்துப் புத்தர் சிலைகளை அன்பளிப்புச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அல்லிப்பளை பாடசாலையை மீள ஆரம்பிக்கக் கோரிக்கை

(பளை)

பளை - அல்லிப்பளை றோ.க.த பாடசாலையை மீளவும் ஆரம்பிக்குமாறு கோரி, அப்பகுதி பொதுமக்கள் அரச அதிபரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

அல்லிப்பளைப் பகுதியில் தற்போது அதிகளவான பொதுமக்கள் மீளக்குடியேறியுள்ளனர். எனினும், இப்பகுதிப் பாடசாலை இயங்காமையால், மாணவர்கள் தினமும் நீண்ட தூரம் சென்றே கல்விகற்க வேண்டியுள்ளது. இதனால், மாணவர்கள் பெருஞ் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இப்பாடசாலை கடந்தகால போர் அனர்த்தங்களால் முற்றாகச் சேதமடைந்துள்ளது. எனவே, இதனைப் புனரமைத்து இயங்க வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

# மாத்தறை மாவட்ட பாடசாலைகளை இன்று முதல் மூடிவிட உத்தரவு!

மாத்தளை மாவட்டத்திலுள்ள அரசாங்கப் பாடசாலைகள் அனைத்தையும், இன்றுமுதல் மறுஅறிவித்தல்வரை மூடுமாறு, கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு அனர்த்தங்களை அடுத்து, தொற்று நோய்கள் பரவிவருவதை அடுத்தே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் தொற்றுக் காய்ச்சல், வயற்றோட்டம் பரவிவருவதாகச் சுகாதாரப் பிரிவினர் கண்டுபிடித்ததையடுத்து, கல்வி அமைச்சு இந்த அறிவித்தலை விடுத்துள்ளது.

அதேவேளை, க.பொ.த. உயர்தரப் பரீட்சை எதிர்வரும் 31 ஆம், 1 ஆம திகதிகளில் நடாத்தத் தீர்மானித்ததில் எந்த மாற்றமும் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)

# ரோக்கியோ மாநாட்டுக்கு பிரதமர் ரணில் அடுத்த மாதம் 7 ஆம் திகதி புறப்படுவார்!

(கொழும்பு)

ரோக்கியோவில் நடைபெறறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அடுத்த மாதம் 7 ஆம திகதி ஜப்பானுக்குப் புறப்பட்டுச் செல்லவுள்ளதாக, பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

உதவிவழங்கும் நாடுகளில் கூட்டம் ரோக்கியோவில் அடுத்த மாதம் 9 ஆம், 10 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இரு தினங்களுக்கு முன்னரே ஜப்பானுக்குச் செல்லும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அங்கு - ஜப்பானியப் பிரதமர் மற்றும் அரச உயர்மட்டப் பிரமுகர்களுடன் பேச்சுக்களை நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ரோக்கியோ மாநாடு முடிந்த பின்னரும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சில தினங்கள் அங்கு தங்கியிருப்பார் என்றும் தெரியவருகின்றது.

# புலிகளின் தலைமைக்குள் பிரச்சனை; செய்திகளில் எந்த உண்மையுமில்லை!

## மறுக்கிறார் அன்ரன் பாலசிங்கம்

விடுதலைப் புலிகளின் தலைமைக்குள் பிரச்சினைகள் ஏற்பட்டிருப்பதாக வெளியிடப்படும் ஊடகத் தகவல்களுக்கும், சில அரசியல்வாதிகளின் பேச்சுக்களுக்கும் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கடுமையான கண்டனம் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றிற்கு அவர் அளித்துள்ள தகவலில், அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது-

புலிகளின் தலைமைக்குள் அதிகாரப் போட்டி நிலவுவதாகவும், சில கடும்போக்காளர்கள் மேலாதிக்கம் பெறுவதாகவும் வெளியான செய்திகள், திட்டமிட்டு வேண்டுமென்றே வெளியிடப்பட்ட தகவலகள் ஆகும்.

இப்படியான கருத்துக்களை - விரக்தியடைந்துள்ள அரசியல்வாதிகளும், பொறுப்பற்ற பத்திரிகையாளர்களுமே வெளியிட்டு வருகின்றனர்.

புலிகள் இயக்கத்தில் கடும்போக்காளர்கள் என்றோ, மென்போக்காளர்கள் என்றோ, நடுநிலையாளர்கள் என்றோ எவரும் இல்லை. தமிழ் மக்களுக்காக அர்ப்பணிப்புடன், உயர்கட்டுப்பாட்டையும் பேணுகின்ற கொள்கையில் உறுதியானவர்கள் என்ற நிலையிலேயே புலிகள் அனைவரும் கடும் போக்காளர்களாக இருக்கின்றனர் எனத் தெரிவித்துள்ளார். இதேவேளை - குறித்த ஆங்கில ஊடகம், சில மாதங்களுக்கு முன்னர் - தனக்கு ஓய்வு தருமாறு கலாநிதி பாலசிங்கம் - புலிகளின் தலைவரிடம் கேட்டபோது, புலிகளுக்கு இறப்பில்தான் ஓய்வுவரும் என்று அவர் தெரிவித்ததாக பாலசிங்கம் பலமுறை கூறியிருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.



## அனைத்துப் பீட மாணவர் கலந்துரையாடல்

யாழ்.பல்கலைக்கழக அனைத்துப்பீட மாணவர்களுக்கான அவசரக் கலந்துரையாடல் ஒன்று- பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில், இன்று காலை 11 மணிக்கு இடம் பெறவுள்ளதால், அனைத்து மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

## கிணற்றில் வீழ்ந்து பெண் மரணம்

நீர் அள்ளிக்கொண்டிருந்தபோது வலிப்பு நோய் ஏற்பட்டதால் கிணற்றில் விழுந்த பெண், உயிரிழந்த நிலையில் உறவினர்களால் மீட்கப்பட்டார். நேற்றுமுன்தினம் நாவாந்துறைப் பகுதியில் இடம்பெற்ற மேற்படி சம்பவத்தில்- நாவாந்துறை, கடற்கரை வீதியைச் சேர்ந்த திருஞானசெல்வம் புஸ்பவதி (வயது 45) என்பவரே மரணமானவராவார். (சு)

## சமரசத்துக்குச் சென்ற இளைஞர் கடி காயங்களுக்கு உள்ளானார்

(நெல்லியடி)

காணித்தகராறை முடிவுக்கு கொண்டுவரும் சமரப் பேச்சில் ஈடுபட்ட இளைஞன் ஒருவரை - தகராறில் சம்பந்தப்பட்டவர் திடீரெனப் பாய்ந்து கடித்துக் குதறினார்.

நேற்றுமாலை கரவெட்டி இராஜகிராமத்தில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில், இதே இடத்தைச் சேர்ந்த இரத்தினம் யசீதரன் (வயது 20) என்பவரே கடிக்கு இலக்காகிக் காயமடைந்தார்.

அயல்வீட்டாருடன், நீண்டகாலமாக இருந்து வந்த காணித்தகராற்றை முடிவுக்கு கொண்டு வருவதற்காக, சமரசப் பேச்சு நடைபெறறுக்கொண்டிருந்தது. அவ்வேளை ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கட்டுமீறிய போது, காணித்தகராற்றில் சம்பந்தப்பட்ட அயல்வீட்டவர், திடீரென இந்த இளைஞன் மீது பாய்ந்து கடித்துக் குதறினார். கழுத்து மற்றும் கை, கால் பகுதிகளில் காயமடைந்த நிலையில் இளைஞன் மந்திகை மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# வெளிக் கிரகம் ஒன்றில் இருந்தும் சார்ஸ் நோய்க்கிருமி வந்திருக்கலாம்!

## சந்தேகம் கிளப்புகிறார் பேராசிரியர் சந்திரா விக்கிரமசிங்க

'சார்ஸ்' நோய்க் கிருமிகள் - வேறொரு கிரகத்திலிருந்து வந்திருக்கலாம் என்று, இலங்கையைச் சேர்ந்தவரும், பிரித்தானிய 'கார்டிவ்' பல்கலைக்கழக விண்வெளி உயிரியல் (Astro-Biologly) பேராசிரியருமான, சந்திரா விக்கிரமசிங்க கருத்து வெளியிட்டுள்ளார்.

பிரித்தானியாவில் இருந்து வெளிவரும் மருத்துவ இதழான, 'லன்செற்' இல் பேராசிரியர் சந்திரா விக்கிரமசிங்க எழுதியுள்ள கட்டுரையொன்றிலேயே, அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

உலகின் பல பகுதிகளிலும் 'சார்ஸ்' நோய் பரவியிருப்பதால், இது விண்வெளியில் இருந்தும் பரவியிருக்கலாம். விண்வெளியில் பெருமளவான கண்ணால் பார்க்கக்கூடிய நுண்ணுயிர்ச் சேதனங்கள் காணப்படுகின்றமை இதற்குச் சான்றாகும்.

புவியிலிருந்து 4.1 கிலோ மீற்றருக்கு அப்பால் இச்சேதனங்கள் காணப்படுவதாக குறிப்பிட்டுள்ள இவர், இந்தச் சேதனங்களின் மாதிரிகளை, இந்தியாவின் ஹைதராபாத் ஆராய்ச்சி நிலையத்தின் மூலம் சேகரிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார். பலூன்கள் மூலம் 2001 ஆம் ஆண்டில் இந்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டன.

வேறு கிரகங்களில் இருந்து வரும் பக்ரீரியா சேதனங்கள், அன்றாடம் புவியை நோக்கி வருகின்றன. இவ்வாறு புவியின் மேற்பரப்பில், ஒரு சதுரமீற்றர் பரப்பளவில் வந்து சேரும் பக்ரீரியாக்களின் எண்ணிக்கை, இருபதாயிரத்துக்கும் அதிகமாகும்.

இத்தகைய பக்ரீரியாக்களின் மூலமே, 'சார்ஸ்' நோய் தொற்றியிருக்கலாம். 'சார்ஸ் வைரஸ்' உலகிற்குப் புதியது. சீனாவில் 'சார்ஸ்' நோய் ஏற்படுவதற்கு முன்னர், இது தொடர்பான எந்தத் தடயமும் அங்கு கண்டுபிடிக்கப்படவில்லை. இமாலய மலைத்தொடருக்கு அண்மையிலேயே இதேபோன்ற தடயத்தைக் காணக்கூடியதாக இருந்ததாக பேராசிரியர் சந்திர விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

## விபத்தில் இளைஞர் காயம்

(யாழ்ப்பாணம்)

மட்டுவிலில் உள்ள அரிசி ஆலைக்கு முன்பாக, மோட்டார் சைக்கிள் ஒன்று மின்கம்பத்துடன் மோதியதில் ஒருவர் படுகாயமடைந்தார்.

மீசாலையைச் சேர்ந்த தேவராசா சுரேஸ் (வயது 25) என்பவரே படுகாயம் அடைந்தார். முதலில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர், மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் தற்போது அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## மிதிவெடி விழிப்புணர்வு கண்காட்சி

யாழ்.மாவட்டத்தில் உள்ள சிறுவர் கழகங்களின் இணையம் - மிதிவெடி விழிப்புணர்வுக் கண்காட்சி ஒன்றை - இன்றும், நாளையும் காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலும், எதிர்வரும் வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் - கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்திலும் நடாத்தவுள்ளது.

இலவசமாக நடைபெறவுள்ள இக்கண்காட்சிக்கு, சிறுவர் பாதுகாப்பு மற்றும் யுனிசெப் ஆகிய வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்கள் அனுசரணை வழங்குகின்றன.

## உதவிப் பொருட்களை வழங்க உல்லாசமாகச் சென்ற பெண்கள்

### பொதுமக்கள் ஏளனக் கூச்சல்

படைத்தளபதி ஒருவரின் மனைவி உட்பட சில உயர்வர்க்கப் பெண்கள், குழுவாக இரத்தினபுரி வெள்ளஅகதிகளுக்கு உதவச் சென்றபோது, அப்பகுதி மக்கள் ஏளனமாகக் கூக்குரலிட்டுக் கிண்டலடித்த சம்பவம் ஒன்று அண்மையில் நடைபெற்றுள்ளது.

ஒரு படகில் இந்த பெண்மணிகளும், மற்றோர் படகில் செய்தியாளர் குழு ஒன்றும் சென்று வெள்ள நிவாரணம் வழங்கியதைப் படம் பிடித்தது. இப்பெண்மணிகள் மிகக் குறைந்தளவு உதவிப் பொருட்களையே தம்முடன் எடுத்துச் சென்றிருந்தனர். இது ஓர் உல்லாசப் பிரசார நடவடிக்கையே என உணர்ந்த அப்பகுதி மக்கள், கூச்சலிட்டு கிண்டலடித்தனர்.

## வைத்தியசாலைக் காவலாளியை தாக்கமுற்பட்ட இளைஞர்கள்!

### எச்சரிக்கப்பட்டு விடுவிப்பு

யாழ்.போதனா வைத்தியசாலையின் பாதுகாப்பு உத்தியோகத்தரை தாக்க முற்பட்ட இரு இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

நேற்று மாலை 3.30 மணியளவில், மதுபோதையில் வந்த இரு இளைஞர்கள், பாதுகாப்பு ஊழியருடன் தர்க்கம் புரிந்து, தகாத வார்த்தைகளையும் உபயோகித்ததோடு, அவரைத் தாக்கவும் முற்பட்டனர்.

இதனையடுத்து சக பாதுகாப்பு ஊழியர்கள், அவரை மடக்கிப் பிடித்து யாழ்.போதனா வைத்தியசாலைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இவர்களைப் பொலிஸார் மேலதிக விசாரணைக்காக யாழ். பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

விசாரணையின் பின்னர், இவர்கள் இருவரும் நேற்று மாலையளவிலேயே எச்சரிக்கை செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். (சு,ரா)

## வட-கிழக்கில் இப்போது தேர்தல் நடத்த வேண்டாம்

### பவ்ரல் அமைப்பு கோரிக்கை

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் நிரந்தர அமைதி ஏற்படும் வரை உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்தப்படக்கூடாது என்று 'பவ்ரல்' அமைப்பு கேட்டுள்ளது.

இது தொடர்பாக 'பவ்ரல்' அமைப்பின் தலைவர் கிங்ஸ்லி றொட்றிகோ தெரிவிக்கையில் -

தற்போதைய நிலையில் வட - கிழக்கில் தேர்தல்களை நடத்த முனைவது, தவறான முடிவுக்கே இட்டுச்செல்லும்.

அமைதி நிரந்தரமாக ஏற்படுகின்ற தருணத்திலேயே தேர்தல்களை நடத்தலாம். இப்போது தேர்தல் நடத்தப்பட்டால் அது சுதந்திரமானதாக, சுயாதீனமானதாக நடக்காது என்றும் - அவர் மேலும் தெரிவித்தார்.

## அந்தியேட்டியில் சாப்பிட்ட ஐவருக்கு வயிற்றோட்டம்!

உறவினர் வீடு ஒன்றில் நடந்த அந்தியேட்டியில், உணவு உட்கொண்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர், வயிற்றோட்டத்தால் பாதிக்கப்பட்டு சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்கள், மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாயில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். வா. பத்மநாதன் (வயது 45) சி. சின்னப்பிள்ளை (வயது 75), கிருபன் (வயது 27), த.சின்னம்மா (வயது 70), ஐ.பாக்கியம் (வயது 54) ஆகியோரே யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

அந்தியேட்டியில் சமைக்கப்பட்ட காய்கறிகள் தோட்டத்தில் இருந்த போது நஞ்சு மருந்து தெளிக்கப்பட்டு இருக்கலாம் என்றும், அக்காய்கறிகள் கழுவப்படாமல் சமைக்கப்பட்டதாலேயே இவர்களுக்கு நோய் ஏற்பட்டிருக்கலாம் என்றும் மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன. (25)

# கிரிக்கெட் வீரர்கள் பகிடியே செய்தனர்; பாலியல் வல்லுறவு நடக்கவில்லை!

## ஊடக முகாமையாளரான பெண் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக் கிரிக்கெட் அணி வீரர்களால் தான் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டதாக ஊடகங்களில் வெளியான செய்திகள் தவறானவை என்றும், அத்தகைய சம்பவங்கள் எதுவும் இடம்பெறவில்லை என்றும் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் ஊடக முகாமையாளரான ட்ரேசி பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களில் வெளியான தகவல்கள் குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் -

கிரிக்கெட் அணி வீரர்களால், வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டிருந்தால், நான் வைத்தியசாலையில்தான் அனுமதிக்கப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறான சம்பவம் எதுவும் நடக்கவில்லை.

தம்புள்ளவில் நடந்த முக்கோண கிரிக்கெட் போட்டியில் விளையாடிய, இலங்கை அணி வீரர்கள் கடந்த மே 8 ஆம் திகதி இரவு 10 மணிக்கு ஹபரண லொட்ஜ்ஜில் இரவு உணவை முடித்துவிட்டு, தாம் தங்கியிருந்த சிகிரியா விலேஜ் ஹோட்டேலுக்குப் புறப்பட்டனர்.

அப்போது வரவேற்பு மேசைக்கு அருகிலேயே இலங்கை கிரிக்கெட் வீரர்கள் என்னைச் சந்தித்தார்கள். இளம் வீரர்களான திலகரட்ண தில்ஷான், ரஸல் ஆர்னல்ட், உபுல் சந்தன ஆகியோர் பகிடியாகக் கதைத்தனர்.

எனது கைப்பையை வாங்கி அதில் என்ன இருக்கிறது என்று ஆராய்ந்து பார்த்ததனர். அவ்வளவு தான் நடந்தது.

மூத்த கிரிக்கெட் வீரர்களின் மனைவிமார் மற்றும் பெண் சிநேகிதிகள் பலர் இருந்த அந்த இடத்தில் வேறெதுவும் நடக்கக்கூடிய சூழ்நிலை இருக்கவில்லை.

இலங்கைக் கிரிக்கெட் அணி இறுதியாட்டத்துக்குத் தெரிவு செய்யப்படாததே இத்தகைய குற்றச்சாட்டுக்குக் காரணம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இருபது வயதான ட்ரேசி, பிரான்சிஸ் அண்மையில்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் ஊடக முகாமையாளராக நியமிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ரோக்கியோ மாநாட்டு ஏற்பாட்டுக்காக மிலிந்த ஜப்பானுக்குச் செல்கிறார்!

ஜப்பானில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டுக்கான ஏற்பாடுகளைச் செய்யும் பொருட்டு, அமைச்சர் மிலிந்த மொறகொட விரைவில் ஜப்பானுக்கு பயணமாகவுள்ளார்.

உதவி வழங்கும் மாநாட்டில் பெருமளவான நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொள்ள இருப்பதால், அதற்கான முன்னோடி ஏற்பாடுகளையும், நிகழ்ச்சி நிரலையும் இந்த விஜயத்தின்போது, ஜப்பான் அதிகாரிகளோடு இணைந்து தயாரிப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விஜயத்தின் போது - ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர், ஜப்பானியப் பிரதமரின் தூதுக்குழுவினர் மற்றும் ஜப்பான் அரச அதிகாரிகள் ஆகியோரையும்- அமைச்சர் மிலிந்த மொறகொட சந்தித்துக் கலந்துரையாடுவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

# காடுகள் சுடுகின்றன

அ. இரவி

குறுநாவல்



வெல்லமுடியாத வாழ்விலும், சொல்லமுடியாத கதையிலும் என் வாழ்வு குமைந்து போகுது. சொல்லவேண்டிய என்னிடம் ஆயிரமாயிரம் கதைகள் உள்ளன. 'சொல், சொல்' என்று அவை என்னை இறைஞ்சுகின்றன. ஒன்றுக்கும் மசியாது நான் கல்லாய் அமைகின்றேன். இதயம் கல்லாய்ப்போன, இரக்கமில்லாப்போனோடையே கதையென்று நான் எதைச் சொல்ல? சொல்லும் கதைக்கும் சுவையென்று எதைச் சேர்க்க? வாழ்வில் வருந்தித் துடிக்கின்ற கணங்களும், வருத்தத்தில் நெஞ்சு துடிக்கின்ற ரணங்களுமாய் சிதைந்து வாழ்கிறேன். வாழ்தலில் நோகிறேன். ஆகும் வழி ஏதும் இல்லாது ஆன காலத்தினிடையே நான் கதை சொல்லப் புகுவேன்.

ஒரு நாள் இப்படித்தான் ஆயிற்று வாழ்வு. நான் அப்போ பிறந்திலன். என் வாழ்விற்கு முந்தைய வாழ்வு இது. 1958 ஆம் ஆண்டு! எப்படி எனக்குத் தெரிந்தது.' மூன்று வயதிலிருந்தே என் வாழ்வை நான் ஞாபகம் கொள்வேன். நாள், நாளாய் எனக்கு ஞாபகம் உண்டு. பொழுது பொழுதாய் எனக்குக் கதை உண்டு. அப்பா சொன்ன கதை ஆயிரம். அம்மா சொன்ன கதை ஆயிரமாயிரம். கதைகளை நான் வெறும் காதால் கேட்டேன் அல்லன். காட்சியாய்ப் பார்த்தேன். கற்பனையில் விரித்தேன். உள்ளேபோய் அவை என் உணர்வைத் தொட்டன. ஒருவன் உண்கின்றபோது, அவன் தாடை அசைவில் அவன் துயரைப் புரிந்தேன். அவன் குடும்பத்தைக் கண்டேன். அவன் ஏழ்மையை, ஏதும் இல்லாக் கொடுமையை உணர்ந்தேன். அவன் பசியை அறிந்தேன். நான் காதால் கேட்பது ஒரு சின்னக்கதை. அது ஒரு காவியமாய் என் கற்பனையில் காட்சியாக விரியும்.

மினுவங்கொட கல்லுலுவவில் அப்பா படிப்பிக்கிறார். அப்பா - அம்மாவுக்கு அழகுக் குழந்தையாய் அக்கா இருக்கிறார். அம்மாள் கொடுத்த குழந்தை வெள்ளைப் பெட்டையாய், குண்டுப் பெட்டையாய் பெரிய குண்டியை ஆட்டி ஆட்டி அரிவுக்கும், பாத்திமாவுக்கும் வாலாய்த் திரியும். வால்தான் சரியான வாலுந்தான். ஹாஜியார் இந்த மோள் எனக்குத்தான் எண்டு கன்னம் கடிச்சக் கொஞ்சுவார். அந்தக் குண்டுப் பெட்டையில் ஆருக்குத்தான் ஆசை வராது? மாம்பழக் குஞ்சல்லவா, கன்னத்தில் கைகளில் குண்டிக்கட்டில் மார்பில், தொடையில் கணுக்காலில் தோள் மூட்டில் எங்கும் சிவந்த செம்மையான மாம்பழம். 'ம்கூம்.. அம்மாவுக்கும், அப்பாவுக்கும் அந்த மாம்பழம்' மழலை கொஞ்சும். ஹாஜியார் பெரியதாய் சிரிப்பார். இந்த மாம்பழம் எனக்குத் தாண்ட என்று சொல்லி அன்பைக் கொடுக்கலாம். அள்ளிக் கொடுக்கலாம். அன்பை எடுக்கலாமா? தன் வயிற்றில் பிறவாத, தன் இரத்தமாய் ஆகாதவளிடம் அன்பை எப்படிக் கொடுக்கலாம். சின்னி விரலைக்கூடத் தருவாளா? ஹாஜியார் மீசை தடவிக் குறுந்தாடி தடவிக் கண்ணீர் பொங்கச் சிரிப்பார். அழுகை மனசை முட்டும். இல்லையென்று இன்னும் சிரிப்பார். அப்துல்லா எங்கிருந்தோ லொபி பழங்களைக் கொண்டுவருவான். கறுத்துத் திரண்ட பழங்கள். அந்தக் குண்டுப் பெட்டையின் கண்களைப்போல அவை இருந்தன. அதனால்தான் தன் தங்கைக்குக் கொடுக்காமல் குண்டுப் பெண்ணுக்குக் கொடுத்தான் அந்த லொபிப் பழங்களை. புளித்தும், இனித்தும் இருந்தன பழங்கள்.

கல்லுலுவவில் அப்பாவிடம் படித்தவர்கள் ஒரு சில நூறு பேர்தான். அவர்களுக்குத்தான் அப்பா மாஸ்ரர். ஆனால், அவர்கள் அன்னைக்கும் தந்தைக்கும் ஊரில் அனைவருக்கும் அப்பா மாஸ்ரர். கொத்தவந்த நாகத்தை 'சாது சாது' என்று பற்றைக்குள் அனுப்பிவைத்த பன்சாலை பிக்குவிற்கும் அப்பா மாஸ்ரர். ஆருக்கும் 'சியாமளாம்மா' என்றுதான் அம்மாவைத் தெரியும். அக்காவை சியாமளா எண்டு ஒருத்தரும் கூப்பிட்டதாய் இல்லை. பிள்ளை அல்லது மோள். அக்கா என்று கூப்பிட மூன்று வருசம் ஆயிற்று. நான் பிறக்கவேண்டியதாய் போச்சு. நான் பிறக்கும்வரை அப்பா நோன்புக்கு நல்லா இறைச்சி சாப்பிட்டார். ஆனால், மாட்டிறைச்சி எண்டால் பஞ்சிப்பட்டார். அம்மா ஒன்றும் இல்லை. கோழிகூட இல்லை. கிடாய் இறைச்சி வேணும். அதுவும் வேள்வி இறைச்சியாய் இருக்கவேணும். ஊரில் பங்கிறைச்சியாய் இருந்தாலும், அருக்குளித்தா. அதுபற்றி அம்மம்மாவிலும் பார்க்க ஹாஜியாரின் உம்மாவிற்குத்தான் கவலை அதிகம். நோன்புக் காலத்தில் உம்மா வேண்டிக்கொண்டதில் அம்மாவுக்கு ஒரு ஆம்பிளைப்பிள்ளை பிறக்கவேணுமெண்டதும் முக்கியமானது. அப்பா அதுக்காக சுன்னத்துகூடச் செய்தார்.

ஹாஜியாரின் மகன் ஒரு வெடிபக்ரறி வைச்சிருந்தார். தைப்பொங்கல் வந்தால் கட்டுக்கட்டாய் அப்பாவுக்கு வெடி கிடைக்கும். பூறிசிலை பிடிப்பதில்லை. சீறுகிற எதுவும் அவ்வளவாய் பிடிப்பதில்லை. கொளுத்திப் போட்டால் படார் என வெடிக்கவேணும். அவிட்டு வாணமாய் வான் ஏறி முழங்க வேணும். ஊரை ஒருமுறை உலுப்ப வேணும். ஊர் கிழிபடுகிற மாதிரியான வெடிவேணும்.

பொங்கலுக்கு வெடி கொளுத்த அந்த ஊரில வேறு யாருமில்லை. அப்பாவே கொளுத்தினார். அப்படிக் கொளுத்தவும் அப்பாவுக்கு நேரமில்லை. சூரியன் எழப் பொங்கல் பானை சரியவேணும். நந்தா வீட்டைபோய் விடியப்புறத்தில் சாணி அள்ளி, நந்தாவின் ஒரு புன்சிரிப்புப் பார்த்து, பிறகு வந்து முத்தத்தில் சதுரமாய் மெழுகி, கிழக்கு மூலையில் சூரியன் படமும், மேற்கு மூலையில் சந்திரன் படமும் கோலமாவால் கீறி, சூரியன் படத்துக்குப் பக்கத்தில் பொங்கல் பானையை வைத்து, சீறி எரியும் சுள்ளிகளை மூட்டுவார். பனி பெய்கிற அந்த விடிகாலையில் ஒரு சுள்ளி எடுத்து கட்டுவெடி கொளுத்துவார். கல்லுலுவ என்னும் முஸ்லிம் மற்றும் சிங்கள கிராமம் - அப்பாவின் வெடி கொளுத்துக் கேட்டுத் திடுக்கிடும், பிறகு விழிக்கும்.

பொங்கல் பானை சரிகிறபோது அப்பாவால் வெடி கொளுத்த முடிவதில்லை. பொங்கல் பானையைப் பார்க்கவா? வெடி கொளுத்தவா. அம்மா அசையமாட்டேன் என்கிறார். வெடிச்சத்தத்தில் பகலெல்லாம் ஊரை மயக்கிவிட்டு, இரவில் ஆழ்ந்த நித்திரை கொள்கின்ற அந்தக் குண்டுப் பெட்டை திடுக்கிட்டு முழிக்க அம்மா, அக்காவை மடியில் இருத்தி வடை சுடவேண்டி வந்தது. மோதகம் அவிக்கவேண்டி வந்தது. பனிக்குளிருக்கு அடுப்பு வெக்கை அக்காவிற்கு இதமாய் இருந்தது. உந்தக் கோதாரி மனிசன் இப்பவும் குழந்தைப் பிள்ளை மாதிரி வெடி கொளுத்தி விளையாடுது... அம்மா புறுபுறுத்தா. அம்மாவிற்கு வடை சுடுவதிலும், மோதகம் அவிப்பதிலும் இருக்கும் ஆனந்தம், அப்பாவிற்க வெடி கொளுத்துவதில் இருக்கக்கூடாதா? தமிழரின் தனித்துவம் பொங்கல் என்று அப்பா ஊருக்கு அறிவித்தார்.

அம்மாவும் அதைத்தான் செய்தா. அவ்வளவு வடையும், அவ்வளவு மோதகமும், அவ்வளவு சக்கரைப் புக்கையும் தின்ன வீட்டிலை ஆர் இருக்கினம்? ஆனால், ஊரில ஆக்கள் இருந்தினம். பொங்கல் முடிய - பெட்டி, சருவச்சட்டி, வாழையிலை, தாமரையிலை, பேசின், கும்பா, சட்டி, கோப்பை, தட்டு எண்டு எல்லா ஏதணங்களிலும் மோதகமும், வடையும், புக்கையும் கல்லுலுவவின் ஒழுங் கைகளில் திரிந்தன. எல்லா வீடுகளுக்கும் போயின. பிக்கு அமிர்தமாய் அதை உண்டார். ஹாஜியார் தேறல் உண்ட தித்திப்பில் ஆழ்ந்தார். நந்தா கூட்டி அள்ளிக் கூந்தலை ஒரு கொண்டைபோட்டு, நாக்கு கட்டுணர்ந்த உருசியில் மயங்கினா. அப்படி அவர்கள் மூவருடனும் விடுவது சரியல்ல. இன்னுமுள்ள அத்தனை பேருக்கும் அது அமிர்தமாயிற்று.

அப்படித்தான் இதையும் சொல்லவேண்டும். அந்தக் கிராமத்தில் ரம்ழான் நோன்பு எல்லோருக்கும் என்றார்கள். வெசாக்குக்கும் அதன் முன்தினத்திற்கும், பின்வந்த நாள்களுக்கும் கல்லுலுவ, விழாக்கொண்டாடி மகிழ்ந்தது. எல்லா வீடுகளிலும் வெசாக் கூடு ஒளிர்ந்தது. கொண்டைப் பணியாரம், கொக்கீஸ், களுதொதல், அரியதரம், பால்ரொட்டி, கிரிபத் எல்லாவற்றையும் எல்லோரும் இனிக்க இனிக்க உண்டார்கள்.

அந்தப் பூரணை நிலவில் கபரக்கொய்யா வருது. இந்தா பிள்ளையைப் பிடிச்சுக்கொண்டு போ... எண்டு வெருட்டி அம்மா சோத்துடன் உருளைக்கிழங்கு பிசைஞ்சு தீத்தி அந்தக் குண்டு பெட்டையை மேலும் குண்டாக்கினா. வாய்க்காலில் ஓடிய நீரில் பூரணை நெளிந்தது. வாய்க்காலும் பகல் வெயில்பட்டுத் தண்ணீர்வற்றப் பார்த்தது. உது சரி வராது என்று இரவுப் பணிக்கு மீண்டும் தண்ணீர் முட்டிப் பாய்ந்தது. எவ்வித கிலேசமும் இன்றி நீர்ப்பாம்புகள் காலுக்குள்ளால ஓடின. விஷப்பாம்பிற்கும், அவைக்கும் பொழுதுபட வித்தியாசம் தெரியாததனால், வெசாக்கிற்கு துள்ளிக்குதித்தன. கபரக்கொய்யாக்கள் தம் வாலால் முதுகில் விளாசின. சளசளவென நீர் தெறித்துவந்தது. அவற்றை வெசாக் பூரணை நெளிய நெளியப் பார்த்தது. ஒருபோதும் மழை தூறியோ, மந்தாரம் மறைத்தோ வெசாக் பூரணை திகைத்துத் திணறியதில்லை.

பகலுக்கு என்னவோ, இரவுக்கு மிக அழகிய ஊர் அது. பகலில் களைத்துப்போய் வியர்வைக்கு வேர்வைப் பிசுக்கு இருப்பினும், பொழுதுபட குளத்தில் முழுகிவிட்டு தென்னந்தோப்பின் பின்புறத்தால் வந்து, லாம்பின் வெளிச்சத்தில் தன் அழகை மறைக்கமுடியாமல் கூந்தலைப் படர விட்டிருக்கின்ற நந்தாவைப்போல ஊர் அழகாய் இருந்தது.

அவ்வளவாய் பேதம் தெரியவில்லை. ஆட்களிடம் 'நங்கி' என்று அன்பொழுக அழைத்து, அம்மாவிடம் பிரியம் வைத் திருக்கின்ற பெரேராவிற்கும், 'எண்ட மோள்' என்று அக்காவிடம் பாசம் கொட்டுகிற ஹாஜியாருக்கும், 'மாஸ்ரர்' எண்டு அப்பாவை அழைத்து அரசியலை அலசுகின்ற பன்சாலை பிக்குவிற்கும் பேதம் தெரியவில்லை. அப்பா - ஜி.ஜி.பொன்னம்பலம் என்று நிற்பார், பிக்கு - பண்டாரநாயக்கா என்று நிற்பார் . அவ்வளவுதான் பேதம்.

ஆயினும், செல்வரத்தினக் குருக்களிடம் அப்பாவிற்கு எப்படிப் பணிவு இருந்ததோ, அதே பணிவு பிக்குவிடம் இருந்தது. மற்றும்படி ஒன்றுக்கும் ஒருவரிற்கும் பேதம் தெரியவில்லை.

ஆயினும் - எல்லாமும் உள்ளேயே கனன்று இருந்ததோ? சாம்பல் பூத்த வெளி மேற்பரப்பாய் தெரிந்ததோ? சாம்பலை ஊதிக் கிளத்தணல் பிறக்கும். உள்ளே கனன்று எரியும். அப்படித்தான் இதுவுமோ? சாம்பலை ஊதி, உள்ளே கிளறி ஒருவிரல் வைக்க அள்ளியது தணல். விரல் அவிந்து போயிற்று. விரல் நுனியில் கறுப்புப் பட்ரத் தொடங்கியது.

அப்பாவின் நெற்றியில் கீற்றாய் நீறு. அம்மாவின் நெற்றியில் வட்டமாய் பொட்டு. ஹாஜியார் குறுந்தாடியுடன் தொப்பி அணிந்திருந்தார். உம்மா முக்காடிட்டிருந்தா. பன்சாலைப் பிக்குவின் தலை மொட்டையாய் இருந்தது.


(தொடரும்)

## ஈர்த்தலினாலான பிடித்தல்

ஈர்ப்பு எல்லா இடமும் இருப்பதால்தான்
இயங்குதல் நிகழ்கின்றது.
புவிச் சுழல்தலுக்கும், சுற்றுகைக்கும்
பொருட்களின் கீழ்நோக்கியதான
வீழ்தலுக்கும்
ஈர்ப்பே காரணமாகின்றது
பழம் மீதான ஏவாளின் ஈர்ப்பே
மனுக்குலத்தின் பிறப்பாயிற்று.
ஈர்ப்பின் மூலத்திற்கு ஏன், எதற்கு
என்ற கேள்விகளெல்லாம்
அர்த்தமிழந்த முண்டங்கள்!
உன்னை நோக்கியதான என்
ஈர்ப்பின் மூலமும் எனக்குத் தெரியாது.
அழகோ, அறிவோ, குணமோ
காரணம் இலையாயிருக்க
சாத்தியிருக்கப் போவதில்லை.
இவற்றை உன்னை விடவும்
அதிகமாய் கொண்டோரை நான்
அறிந்தேயிருக்கின்றேன்.
உன் மீதான கவர்தல்
உன்னிடத்தே எல்லாவற்றையும்
பிடிக்க வைத்தது.
அதனாற்தான் போலும் உந்தன்
உதட்டுக்கு மேலுள்ள மச்சம்
வியர்வை வாசனை,
தெற்றிப்பல் சிரிப்பு
இவைகளைப் போலவே
என் மீதான உனது
'நிராகரித்தலும்'
உள்ளத்துக்குள் குத்தூசியான போதும்
எனக்குப்
பிடித்தமானதாயிற்று.

- தபின்


## தேடல்



வாழ்க்கை ஒருதடவை சுகத்தை வழங்கிடுமுன்
நூறு தடவை
துயரைத் தருகிறது.
துயரங்கள் நாமாக முதுகினிலே தூக்கிவைக்கும்
சுமைகளென மூச்சுத்
திணற வதைத்துவிடும்.
துயரத்தை வெல்லத் துணிதல் சுலபமல்ல.
துயர்கள் வதைக்கவருஞ் சூழ்நிலையில்,
பொறிகலங்கி
உயிர்துடித்து நொந்து ஒடுங்கும் பொழுதுகளில்,
பார்வையினால் எந்தன் பயந்தணித்துப்
புன்னகையாந்
தீர்த்தம் தெளித்தெந்தன்
சிந்தை சிலிர்க்கவைத்து
மெல்லக் கரம்வருடி, மிருதுவாய்த் தலைகோதி
உள்ளத்திற் தெம்பூட்டி உதவி
முதுமையெனும்
மன்றினும் எனக்காய் வழக்காடிக்
கடைசிவரை
அன்பாலென் ஆன்மாவை
அபிஷேகஞ் செய்கின்ற
துணையாய் உனைக் கேட்டேன் -
எனையும் அதுபோல
'உனக்காக...' உன்னை
ஊரூராய்த் தேடுகிறேன்.

- ஜெயசீலன்

## A-9 னை நீளும் நினைவுகள்




நீலக் கடலோ பகலிற் சிரித்திடும்!
நிலவு நின்று முகம் பார்க்கும் ராவினில்
ஈனக்குரலில் மெல்ல இரைந்திடும்!
எட்டுத் திக்கும் இருளின் மடியினில்
வீழ... அஞ்சும்! வாய் பொத்திக் குமுறிடும்.
வேகப் படகுகள், கரையின் துவக்குகள்,
கீறுங் கோட்டினால் காயங்கள் பட்டிடும்.
கிளாலி நினைவு என் நெஞ்சை அடைத்திடும்.

மாலையானதும் மக்கள் திரளுவர்.
வனாந்தரம் போல அன்று திகழ்ந்திட்ட
மாகரையில்... பயணச் சுமையுடன்
மாலையானதும் மக்கள் திரளுவர்.

மாலை... கறுப்பு உடையைப் புனைந்து... இரா
ஆகையில், உப்புக் காற்று அளைகையில்
நேரே கிளாலித் துறையிற் படகேறி
நேர்த்தி பண்ணத் தொடங்கி நடுங்குவர்.

வள்ளத் தொடுவை அசைந்து வெளிக்கிட
மனதுள் கந்த சஷ்டிக் கவசத்தைச்
சொல்லத் தொடங்குவர் சிலர்... அட ஆண்டவா
துணையிருந்து 'கரைசேர' வையென
துள்ளும் அலையின் துயரொலி மேவியே
துதிப்பராம் சிலர், உயிரைக் கரங்களின்
உள்ளே பொத்திக் கொடுகுவர் பற்பலர்.
ஊதக் காற்றை இரசிக்க அங்கா ரெவர்?

## இலக்கிய உலகில் புதிய உந்துதலுக்கு "ஈழத்துத் தமிழ்க் கவிதை ஆய்வரங்கு"

ஈழத்து இலக்கியப் பயணத்தில் உச்சப் புள்ளியைத் தொட்டு, பின்னர் 1995 களில் ஏற்பட்ட பாரிய புலப்பெயர்தலோடு ஒரு தேக்கநிலையை அடைந்துநின்ற யாழ்ப்பாணத்தில், புரிந்துணர்வின் பின் கலை, இலக்கியம் சார்ந்த செயற்பாடுகள் முழுவீச்சோடு முன்னெடுக்கப்படுவதனைக் காணலாம். 'மானுடத்தின் தமிழ்க் கூடல்', 'சினியாத்ரா', தேசியக் கலைக்கழகத்தின் 3 நாள் இலக்கியவிழா, தூண்டி இலக்கிய வட்டத்தின் சிறுகதை ஆய்வரங்கு, திருமறைக்கலாமன்றத்தின் தமிழ் விழா போன்ற விழாக்களோடு, தமிழகத்திலிருந்து வருகைதரும் இந்திய அறிஞர்கள், கலைஞர்கள் பங்கேற்கும் நிகழ்வுகளும் நடந்தேறிய வண்ணமே உள்ளன.

இவ்வகையில், தூண்டி இலக்கிய வட்டம் இம்மாத இறுதியில் ஈழத்துத் தமிழ்க் கவிதை ஆய்வரங்கு ஒன்றினை, முன்னைய கவிதைசார் ஆய்வரங்குகளை விடவும் வித்தியாசமான முறையில் நடத்தவுள்ளது.

எதிர்வரும் 31.05.2003 - 01.06.2003 ஆகிய தினங்களில் யாழ்.பல்கலைக்கழகக் கேட்போர் கூடத்தில் நான்கு அமர்வுகளாக நடைபெறவுள்ள கவிதை ஆய்வரங்கில் - ஈழத்தில் கவிதைத்துறையில் தடம்பதித்த கவிஞர்களும், அறிஞர்களும் பங்குகொண்டு - தம் கருத்துரைகளையும், ஆய்வுரைகளையும் நிகழ்த்தவுள்ளனர். கலாநிதி இ.முருகையன், கலாநிதி M.A.நு்.மான், சு.வில்வரத்தினம், கருணாகரன், நிலாநதன், சோ.பத்மநாதன், மு.பொன்னம்பலம், அ.யேசுராசா, ஈ.குமரன், பா.அகிலன், சண்முகம் சிவலிங்கம், கலாநிதி செ.யோகராசா, பேராசிரியர் அ.சண்முகதாஸ் போன்ற கவிதையை எழுதும், ரசிக்கும், விமர்சிக்கும் குழாம் ஒன்று இந்த ஆய்வரங்கினை அலங்கரிக்கின்றது.

ஈழத்தின் முக்கிய கவிஞர்களை ஒருங்கே சந்தித்து அவர்களின் கருத்துப் பகிர்தலின் ஊடான கூறுபொருளை நுகர்வதற்கு இது ஒரு சிறந்த சந்தர்ப்பம் என்றே கூறவேண்டும்.

அத்தோடு - "இக்கவிதை ஆய்வரங்கானது, தனது நோக்கினை ஒரு தெளிந்த வரையறைக்குள் கொண்டுள்ளது. இந்த ஆய்வரங்குக் கவிதையை, காலரீதியாகவோ அன்றி உள்ளடக்க ரீதியாகவோ ஆய்வு செய்யாமல், ஒவ்வொரு கவிஞர்களின் படைப்புக்களின் ஊடான ஆய்வரங்காக அமைகின்றது. ஏனெனில், கால உள்ளடக்க ரீதியான ஆய்வுகள் - சூத்திரப் பாங்காகக் குறிப்பிட்ட படைப்புக்களை மட்டுமே விதந்துரைக்கின்றநிலை தொடர்ந்து காணப்படுகின்றது. அதற்கு மாறாக, ஈழத்துக் கவிஞர்களின் படைப்புக்கள் யாவற்றையும் ஆராயும் நோக்கோடுதான் இந்த ஆய்வரங்கு அமைக்கப்பட்டுள்ளது" - எனத் தூண்டி இதழில் ஆசிரியர் தி.செல்வமனோகரன், தமது தூண்டி இலக்கிய வட்டத்தினால் நடத்தவிருக்கும் இந்த ஆய்வரங்கு குறித்த நிலையையும், அதற்குரிய காரணத்தையும் விபரிக்கின்றார்.

ஈழத்தில் இதுவரை காலமும் தமது உணர்ச்சித் தெறிப்புக்களை கவிதை வடிவத்தினூடாக வெளிப்படுத்திய பல முக்கிய கவிஞர்களையும் தற்போது புலம்பெயர்ந்தும் எழுதிக்கொண்டிருக்கும் ஈழக்கவிஞர்களையும் இந்த ஆய்வரங்கு அவர்களின் படைப்பின் ஊடாக நோக்குகின்றது. எனினும், இவ்வாய்வரங்கில் முஸ்லிம் சகோதர கவிஞர்களில் ஒரு சிலரே ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அத்தோடு, தற்போது புதிதாய் எழுந்துவருகின்ற இளம் தலைமுறைக் கவிஞர்கள் பலரும், அவர்களின் கவிதைகளும் இவ்வரங்கில் பேசாப் பொருளாகிவிட்டன. எனினும், தமது பணி தொடரும் என்ற தூண்டி இலக்கிய வட்டத்தினரின் கூற்றுமூலம் இனி வருகின்ற காலங்களில் இவ்வரங்கிலே பேசப்படாத கவிஞர்களைப் பற்றிய தேடலும், அதன் மூலமான அவர்களின் படைப்பினை அலசுவதும் நிகழ்ந்தேறும் என்று எண்ணத்தோன்றுகிறது.

இக்கவிதை அரங்கில் மற்றையதொரு சிறப்பு அம்சமாகவும், வித்தியாசமானதாகவும் இனம் காணக்கூடியது யாதெனில் - நான்கு அமர்வுகளாக நடைபெறவுள்ள இவ்விழாவில், ஒவ்வொரு அமர்வு முடிவின்போதும் ஒவ்வொரு கவிதை நாடகங்கள் அளிக்கை செய்யப்படவுள்ளன. தே.தேவானந்த், ஞா.கெனத், கோகிலா மகேந்திரன் போன்றோரின் நெறியாள்கையில் உருவாக்கப்பட்ட இன் நாடகங்கள், தொடர்ச்சியான கருத்துரைகளை உள்வாங்கியதால் இறுகிப்போய் இருக்கும் உணர்வுளை மீண்டும் இரசனைப் புள்ளியை நோக்கி நகர்த்த பேருதவிபுரியும். கவித்தை நாடகம் என்பதும்கூட கவிதையின் இன்னொரு பரிமாணமே ஆகும். மஹாகவியின் புதியதொரு வீடு எனும் கவிதை நாடகத்தில் இடம்பெற்ற "சிறு நண்டு மணல் மீது படம் ஒன்று கீறும்" எனும் கவிதை இன்றும் பலராலும் எடுத்தாளப்படுகின்ற கவிதையாக இருப்பதனை இந்நேரத்தில் நினைவில் கொள்வது அவசியம்.

இரண்டு நாட்கள் யாழ். மண்ணில் கவிதையாற்றினைப் பாயவைக்கப்போகும் தூண்டி இலக்கிய வட்டத்தினரின் இக்கவிதை ஆய்வரங்கு - ஈழத்து இலக்கிய உலகில், கவிதைத்துறையில் ஒரு உந்துதலை ஏற்படுத்தி, தாக்கு வன்மைகொண்ட ஒரு நிகழ்வாக நடந்தேறி, இலக்கிய வரலாற்றுப் பதிவுகளில் ஒரு மைல் கல்லாக விளங்கும் என்பதில் சந்தேகமில்லை.

**த.பிரபாகரன்**

## கிழக்கும் மேற்கும்

### மாமன்னன் அரிச்சந்திரன் — இறையன்பன் யோபு!



இலட்சிய வாழ்க்கைக் காக
இடர்பல பெற்ற மன்னன்
இறுதியில் இலட்சி யத்தில்
வென்றனன் கிழக்கில் அன்று!
இலட்சிய வாழ்க்கை தன்னில்
இன்னல்கள் பெற்ற அன்பன்
இறுதியில் இலட்சி யத்தில்
வென்றனன் மேற்கில் அன்று!

கோசல நாட்டினுக்கு
அயோத்தியைத் தலைநக ராக்கிக்
கோன்முறை அரசு செய்தான்
அரிச்சந்திரன் என்னும் மன்னன்!
இந்திர சபையில் ஓர் நாள்
"சத்தியம் நேர்மை வாழ்வின்
மந்திர மாக்கிக் கொண்டு
வாழ்பவன் எவனும் உண்டோ?"
என்றொரு கேள்வி கேட்ட
வானவர் கோனைப் பார்த்து
"மன்னன் அரிச்சந்திரனே
சத்திய வாழ்க்கை வாழ்வோன்"
என விடை அளிக்கக் கேட்டு
மாமுனி விசுவா மித்திரர்
சினம்மிகக் கொண் டெழுந்து
"அவனொரு பொய்யன் கள்வன்"
எனமறுத் துரைக்கக் கேட்ட
மாமுனி வசிட்டர் நொந்து
"எனிளதை நிறுவல் வேண்டும்"
என்றுடன் கிளர்ந்து நின்றார்!

"அவனிக்கு இன்றே சென்று
என் சொல்லை நிறுவுவேன் யான்!
அதனை நீர் காண்பீர்" என்று
அவையினுக் குரைத்து விட்டு
மண்ணுல கினுக்கு வந்த
மாமுனி விசுவா மித்திரர்
மன்னனை நேரிற் கண்டு
"யாதமொன் றியற்று தற்குப்
பெரும் பொருள் வேண்டும்" என்றார்!
மன்னனும் தயக்க மின்றிப்
பெரும் பொருள் அளித்த போது
"வேண்டும்போ திவற்றை யானே
பெறும்வரை வைத்துக் கொள்வாய்""""
என்றங்கு விட்டுச் சென்றார்!

(தொடரும்)

## பாலையும் சோலையும்

### கலாநிதி சொக்கனின் வாழ்க்கைப் பதிவுகள்



சைவ வித்தியா விருத்திச்சங்க நிர்வாகத்தில் இயங்கிய சரஸ்வதி வித்தியாலயம், கத்தோலிக்க திருச்சபையின் புனித பீற்ஸ் கல்லூரி, கிறிஸ்தவ (மெதடிஸ்) திருச்சபையின் ஊவாக் கல்லூரி, மகளிர் உயர் கல்லூரி, பௌத்த சபையின் தர்மதூதாக் கல்லூரி என்பனவும், அரசாங்க வித்தியாலயம் ஒன்றும் பதுளை வாழ் மக்களின் கல்விப்பசிக்கு விருந்தளித்த கலைக் கோயில்களாய் விளங்கின. சரஸ்வதி வித்தியாலயம் முற்ற முழுக்கத் தமிழ்ப் பிள்ளைகளுக்குக் கல்வி வழங்கிய தமிழ்ப் பாடசாலை. அரசாங்கப் பாடசாலையும் அத்தகையதே. எஞ்சிய கல்லூரிகள் சிங்கள, தமிழ், முஸ்லிம் மாணவர்களுக்கு ஆங்கில மொழி மூலம் கல்வி வழங்கின. அவற்றிலே கற்பித்த தமிழாசிரியர்கள் திருக்கூட்டத்தில் நானும் ஒருவன்.

மொடேன் திரைப்பட மாளிகைக்கு வடபுறத்திலிருந்த தொடர்மாடிக் கட்டடத்தின் மேல் மாடியில் அஸ்பெஸ்டாஸ் படல்களைக்கொண்டு பிரித்துத் தனித்தனி அறைகளாய் நான்கிருந்தன. அவற்றில் ஒவ்வோரறையிலும் இருவராக யாழ்ப்பாண ஆசிரியர்கள் எண்மர் இருந்தோம். நீண்டகாலம் குடியிருந்த இருவர் மட்டுமே மெத்தை, கட்டில் பயன்படுத்த, எஞ்சியோர் சாக்குக் கட்டில்களைப் பயன்படுத்தினோம். எல்லாரும் தமிழ் ஆசிரியர்கள். ஆதலால், அன்றைய வழக்கிற்கு அமைவாய் தேசிய சட்டையும் (National), வேட்டியுமே எங்களின் சீருடைகள். வெளியே போகுங்காலங்களில் காலை மூடும் சப்பாத்து அணிவோம். கடைக்குச் சாப்பிடச் செல்லும்போதும், குளியலறை, கழிப்பறைகளுக்குச் செல்லும் போதும் - மரமிதியடிகளைப் பயன்செய்தோம். சீமெந்துத் தரைகளிலும், தார்போட்ட வீதிகளிலும் 'டக் டக்' என்று பலத்த ஓசையுடன் 'கட்டை'யிலேபோன. காலங்கள் நினைவை விட்டகலாதவை.

(தொடரும்)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந்து ஊக்கின்
உயிர்க்குஇறுதி ஆகி விடும்.

- திருக்குறள்.

# நமது நோக்கு

## தறிகெடும் வீதி ஒழுங்கு!

யாழ். நகரப்பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற வீதிவிபத்தொன்றில் பரிதாபகரமாகப் பலியான பெண்ணோடு - இந்த வாரத்தில் மட்டும் - ஆறு பேர் வரை யாழ்.மாவட்டத்தில் நடந்த விபத்துக்களில் பலியாகியிருக்கின்றனர். பலர் படுகாயமடைந்திருக்கின்றனர்.

அண்மைக் காலத்தில் - இந்த வாரம், விபத்துக்கள அதிகம் இடம்பெற்ற காலப்பகுதி என்பதோடு - யாழ். குடாநாட்டில் வீதி விபத்துக்களின் எண்ணிக்கையும் திடீர் அதிகரிப்பைக் காட்டுவது கவனத்திற்குரியதாகின்றது.

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தளவில் - வீதி ஒழுங்குகளைப் பற்றிப் பொலிஸாரின் அறிவிப்புக்கள் வெளியாகிவருகின்ற போதும் - அவற்றை நடைமுறைச் சாத்தியமானதாக்கும் முயற்சிகள் குறிப்பிடத்தக்க பலன்களைத் தரவில்லை என்றே கருதப்படுகின்றது.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் - சைக்கிளோட்டிகள் மீதான வீதி ஒழுங்குகள் தொடர்பாக, பொலிஸார் ஒழுக்கவிதிகளை அறிவித்து நடவடிக்கையைத் தொடங்கிய வேகம் - ஒரு சில நாட்களிலேயே, வந்த வேகத்திலேயே தணிந்து போனது.

சைக்கிள்களே, யாழ்.குடாநாட்டின் பிரதானமான போக்குவரத்து வாகனமாக இருக்கின்ற நிலையில், சைக்கிளோட்டிகளே பெரும்பாலான விபத்துக்களுக்கும் காரணமாகின்றனர். வீதிகளை அடைத்துக்கொண்டு சமாந்தரமாகவும், வீதித் திருப்பங்களில் எதுவித சமிகையுமின்றிச் சைக்கிளைச் செலுத்திச் செல்பவர்களால் - அதிகம் விபத்துக்கள் ஏற்படுவதை வைத்தியசாலை வட்டாரங்களும் உறுதிப்படுத்துகின்றன.

இத்தகைய ஒழுங்கீனமான போக்குவரத்தை மேற்கொள்ளும் சைக்கிளோட்டிகள் மீது, தாம் அறிவிப்பு விடுத்த சில நாட்களுக்கு மாத்திரமே நடவடிக்கை எடுத்த பொலிஸார் - மீண்டும், 'பழைய குருடி கதவைத் திறவடி' கதையாக - தமது நடவடிக்கைகளைக் கைவிட்டுவிட்டதாகவே தெரிகின்றது.

வீதியமைப்புக்களைப் பொறுத்தவரையில் - யாழ். குடாநாட்டின் வீதிகள், உண்மையில் பெருந்தெருக்களுக்குரிய தரத்தைக் கொண்டிருக்கவில்லை என்பது வெளிப்படையானது. குடாநாட்டின் பிரதான வீதிகள் பலவும் - மிகவும் குறுகலானவையாகவும், சீர்த்தன்மையற்றவையாகவும் இருப்பதாலும் - சிற்றொழுங்கைகள், வீதிகள் என்பன 'முழத்திற்கு முழம்' பிரதான வீதிகளில் வந்தேறுவதும் - இன்னமும் விபத்துக்களுக்கான சந்தர்ப்பங்களை அதிகரிக்கின்றது. சைக்கிளோட்டிகளும் - பிரதான வீதிகளுக்குரிய போக்குவரத்து ஒழுங்குகளைக் கடைப்பிடிக்காது, வீதிகளில் பயணிக்க - நிலைமை சொல்லுந்தரமற்றதாகின்றது.

சைக்கிளோட்டிகளின் இத்தகைய ஒழுங்கீனமான போக்குவரத்து மட்டும்தான் என்றில்லை - தலைதெறிக்க ஓடும் மினிபஸ்களும், அவற்றோடு போட்டிக்கு ஓடும் போக்குவரத்துச்சபை பஸ்களுமாக - யாழ்.குடாநாட்டின் வீதிகள், விபத்துக்களை இருகரம் நீட்டி வரவேற்கும் களங்களாகவே நிலைத்திருக்கின்றன.

அதிவேகம் கொள்ளும் வாகனங்கள் மீதும், எண்ணிக்கைக்கு அதிகமாக பயணிகளை ஏற்றும் மினிபஸ் ஓட்டுநர்கள், நடத்துநர்கள் மீதும் நடவடிக்கை மேற்கொள்ளப்போவதாக பொலிஸார் அறிவித்தும் - அது அறிவிப்போடு மட்டுமே நின்றுவிட்டது.

வீதிப் பாதுகாப்பின் அடிப்படையான விடயங்களிலேயே இத்தளர்வு காணப்பட்டால் - புகை கக்கிச் செல்லும், அதிக ஒலியெழுப்பும் வாகனங்களால் சூழல் மாசடைதலைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகள் எல்லாம் - யாழ்.குடாநாட்டைப் பொறுத்தளவில் வெகு தூரத்திலேயே என்றுதான் கூறமுடியும்.

பொலிஸாரைப் பொறுத்தவரையிலும் - அவர்கள் வாகன உரிமங்களைச் சோதிப்பதிலும், தண்டம் அறவிடுவதிலும் காட்டும் ஆர்வத்தை - இந்த அடிப்படை வீதி ஒழுங்கமைப்புக்களில் காட்டாதிருப்பது குறிப்பிடத்தக்கது.

வீதி ஒழுங்குகளைப் பேண வேண்டுமென்பது - தனியே போக்குவரத்தை இலகுபடுத்துவதோடு மட்டும் நின்றுவிடாது, அநாயவசியமான உயிரிழப்புக்களையும், அங்கவீனமடைதலையும் தடுப்பதற்கே என்பதை மக்களும் உணர வேண்டும்.

ஒவ்வொரு வாகன ஓட்டுநரும், பாதசாரியும் தத்தமளவில் வீதியொழுங்கைக் கடைப்பிடிக்க ஆரம்பித்தாலேயே - வீதிப்பாதுகாப்பு குடாநாட்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை எட்டிவிடும்.

மக்களோடு - பாடசாலைகள் போன்ற கல்வி நிறுவனங்களும், தன்னார்வ அமைப்புக்களும் - வீதி ஒழுங்கு விடயத்தில் கவனமெடுத்து - அநாவசியமான இழப்புக்களைத் தவிர்த்துக் கொள்வதற்கு வழிகாண வேண்டி நிற்பது காலத்தின் தேவையாகின்றது.

# வெள்ளம் பாதித்த பகுதிகளில் தொற்றுநோய் பரவும் ஆபத்து

## தடுப்பதற்கு சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை

(கொழும்பு)

தென்பகுதியில் வெள்ளம் மற்றும் மண் சரிவுகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தொற்றுநோய்கள் பரவக்கூடிய அபாயநிலை ஏற்பட்டிருப்பதாகச் சுகாதார அமைசசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இயற்கை அனர்த்தப் பாதிப்புக்குள்ளாகியிருக்கும் பகுதிகளில் பொதுமக்களுக்குச் சுத்தமான குடிநீர், உணவு என்பன கிடைக்காதிருப்பதுடன், இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் அகதி முகாம்களிலும் அடிப்படை வசதிகள் எதுவுமில்லை எனத் தெரியவருகிறது.

அகதி முகாம்களைச் சுற்றிப் பார்வையிட்ட சுகாதார அதிகாரிகள் - அடிப்படை வசதிகளின்றி மக்கள் இங்கு தங்கியிருப்பதால், தொற்றுநோய் பரவும் அபாயம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

காய்ச்சல், வயிற்றோட்டம் என்பன அதிகளவில் பரவக்கூடிய சாத்தியக்கூறுகளும் தென்படுகின்றன. சில இடங்களில் இத்தகைய நோய்கள் ஏற்கனவே பரவத்தொடங்கிவிட்டன எனவும், இதனைக் கட்டுப்படுத்துவதற்கு உடனடியாக மருத்துவக் குழுக்கள் களம் இறக்கப்பட்டிருப்பதாகவும் சுகாதார அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

தினமும் அகதிகள் தங்கியுள்ள முகாம்களுக்கு மருத்துவக் குழுக்கள் விஜயம் செய்து, மருத்துவ பரிசோதனைகளை நடத்திவருவதுடன், அகதி முகாம்களுக்குக் குடிநீர் விநியோகிக்கும் கிணறுகளுக்குத் தினமும் குளோரின் இடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தொற்றுநோய்கள் பரவ ஆரம்பிக்கும் முன்னரே கட்டுப்படுத்தாவிட்டால் - வெள்ள, மண்சரிவு அனர்த்தங்களால் ஏற்பட்ட உயிரிழப்புக்களைவிட அதிகமான மனிதப் பேரழிவுகளைச் சந்திக்கவேண்டியநிலை உருவாகும் என்று சுகாதார அதிகாரிகள் எச்சரித்தள்ளனர்.

# அமெரிக்க விசா மோசடி தொடர்பாக மேலும் இரு இராஜதந்திரிகள் கைது!

(கொழும்பு)

கொழும்பிலுள்ள, அமெரிக்கத் தூதரகத்தில் இடம்பெற்ற விசா மோசடிதொடர்பாக, மேலும் சில இராஜதந்திரிகள் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது. பல மில்லியன் ரூபா பெற்றுக்கொண்டு விசா மோசடிகள் இடம்பெற்றமை குறித்து, அமெரிக்கப் புலனாய்வுத்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்த விசாரணைகளின் தொடர்ச்சியாக மேலும் இரு இராஜதந்திரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சில மாதங்களுக்கு முன்னர், கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில், ஒரு பிரிவுக்குத் தலைவராக இருந்த பில்ஷோவ் என்பவர், இந்த மோசடியில் சம்பந்தப்பட்டதாகக் கூறி, அமெரிக்கப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். இவர், அமெரிக்காவின் இராஜாங்கத் திணைக்களத்தில் கடமையாற்றி வந்தார்.

இதேவேளை - முன்னர் கொழும்புத் தூதரகத்தில் பணியாற்றியவரும், சியோலில் இறுதியாகப் பணியாற்றிக் கொண்டிருந்தவருமான, கிறிஸ் பென்சன் என்ற இராஜதந்திரியும், அமெரிக்கப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வியட்நாம், இந்தியா, இலங்கை நாட்டவர்களுக்கு விசா வழங்குவதற்கு, பெருமளவான பணத்தைப் பெற்றுக்கொண்ட குற்றச்சாட்டின் பேரில், இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் இருவர் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை அடுத்தே, மேலும் இரு இராஜதந்திரிகள் கைதாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தாவரத்திலிருந்து உப்பு தயாரித்து இந்திய விஞ்ஞானிகள் சாதனை!

(புதுடெல்கி)

தாவரத்தில் இருந்து, இந்திய விஞ்ஞானிகள் உப்பினைத் தயாரித்துள்ளனர்.

குஜராத் மாநிலம்- பாந் நகரில் - மத்திய உப்பு மற்றும் கடல்சார் இரசாயன ஆராய்ச்சிக்கழக விஞ்ஞானிகள், இந்தச் சாதனையைப் புரிந்துள்ளனர்.

தாவரத்திலிருந்து உப்பு தயாரிக்கப்படுவது இதுவே முதல் முறையாகும். இந்திய விஞ்ஞானிகள் தயாரித்துள்ள தாவர உப்புக்கு 'சலோனி' எனப் பெயரிடப்பட்டுள்ளது. கடல் நீரில் இருந்து தயாரிக்கப்படும் உப்பில் உள்ள அனைத்துச் சத்துக்களும், இத்தாவர உப்பிலும் உள்ளன.

இந்த உப்புக்கு, சந்தையில் எத்தகைய வரவேற்பு இருக்கும் என்பதை அறிய, வெளிநாட்டு நிறுவனங்களுக்கு மாதிரிகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

உப்புநீரில் வாழும் 'காலிகார்னியா பிராசைதா' என்ற செடியை குஜராத் கடலோரத்தில் கண்டுபிடித்த விஞ்ஞானிகள், அதிலிருந்தே இந்த உப்பைத் தயாரித்துள்ளனர்.

# நிவாரண விநியோகப் பணியில் குளறுபடிகள் இடம்பெற்றுள்ளன

## அமைச்சர் கருஜெயசூரிய தெரிவிப்பு

(கொழும்பு)

தென்பகுதியில் ஆறு மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கு, மண்சரிவுகளால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான நிவாரணப் பணிகளில் குளறுபடிகள் இடம்பெற்றிருப்பதாக அனர்த்த முகாமைத்துவக் குழுவின் தலைவரும், மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சருமான கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

பாதிப்புக்குள்ளான பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரணப் பணிகளில் சில இடங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பதாகவும், கூடியளவு உதவிப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்த - அமைச்சர் கருஜெயசூரிய, சில இடங்களில் உதவி நிவாரணப் பணிகள் முன்னெடுக்கப்படவே இல்லை எனத் தமக்குத் தகவல் கிடைத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

# உயர்கல்வி நிறுவன மாணவர்களுக்கு மீண்டும் பருவகாலப் பயணச் சீட்டு!

## பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிப்பு

கடந்த இரண்டு மாதங்களாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த, உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர்களுக்கான போக்குவரத்துப் பருவகாலச்சீட்டு மீண்டும் வழங்கப்படவுள்ளது.

கடந்த சில மாதங்களாக உயர் தொழில்நுட்ப நிறுவனத் தலைமை அலுவலகம் - போக்குவரத்துச் சபைக்கான குறிப்பிட்ட தொகைப் பணத்தைச் செலுத்தாததால் பருவகாலச் சீட்டுக்கள் வழங்குவது இடைநிறுத்தப்பட்டது.

இதனால், மாணவர்கள் பலமடங்கு பணத்தைச் செலவழித்தே போக்குவரத்தை மேற்கொண்டனர். இதனையடுத்து யாழ் உயர் தொழிநுட்ப நிறுவன இயக்குநர் - நிறுவனத்தின் தலைமை அலுவலகத்துடன் தொடர்புகொண்டதை அடுத்து, ஜூன் மாதம் முதல் பருவகாலச் சீட்டுக்கள் வழங்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

எனவே, பருவகாலச் சீட்டுப்பெற விரும்பும் யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர்களை - நிறுவன அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு, நிறுவன இயக்குநர் இராஜரட்ணம் தெரிவித்துள்ளார்.

# வயிற்றோட்டத்தால் குழந்தை மரணம்

கடந்த ஒரு வாரகாலமாக - வயிற்றோட்டம், காய்ச்சல் ஆகியவற்றால் பீடிக்கப்பட்ட குழந்தை, சிகிச்சை பயனளிக்காது நேற்றுமுன்தினம் மரணமடைந்தது.

எழாலை கிழக்கை சேர்ந்த, சிவகுமார் சசிராஜ் என்ற ஒன்றரை வயது குழந்தையே யாழ். வைத்தியசாலையில் மரணமடைந்தது.

காய்ச்சல், வயிற்றோட்டத்தினால் பாதிக்கப்பட்ட இந்தக் குழந்தை, தெல்லிப்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு நான்கு திங்கள் சிகிச்சை அளிக்கப்பட்டு, பின்னர் கடந்த வெள்ளிக்கிழமை மேலதிக சிகிச்சைக்காக, யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டது. அளிக்கப்பட்ட சிகிச்சை பயனளிக்காது, நேற்றுமுன்தினம் இரவு அக்குழந்தை மரணமடைந்தது.

# இலங்கைப் படைகளுக்கு எத்தகைய உதவிகளை வழங்குவது?

## ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் ஆராய்வு!

ரஷ்யாவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் மிகையில் ரெலிகேவ் மூன்று நாள் விஜயத்தை முடித்துக்கொண்டு கடந்த வெள்ளியன்று கொழும்பிலிருந்து நாடு திரும்பினார்.

மூன்று நாள்கள் கொழும்பில் தங்கியிருந்த ரஷ்ய அமைச்சர் ரெலிகேவ் - பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் முப்படைத் தளபதிகள், பாதுகாப்பு அதிகாரிகள் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடல்களை நடத்தியுள்ளார்.

இராணுவரீதியில் இலங்கைக்கு எத்தகைய உதவிகளை வழங்கலாம் என்பது குறித்து ஆராயவே, ரஷ்ய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் இங்கு விஜயத்தை மேற்கொண்டதாகத் தெரியவருகின்றது.

அத்துடன், ரஷ்யாவினால் வழங்கப்பட்ட இராணுவத்தினால் பயன்படுத்தப்படும் ரி-72 ரக டாங்கிகளை மீள்திருத்தம் செய்வது குறித்து ரஷ்ய அமைச்சர் - இராணுவ அதிகாரிகளுடன் கலந்துரையாடியதாகவும் தெரியவருகிறது.

## வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

### முதலாவது அகவையில்



பெயர் : சி.திலக்ஷன்
முகவரி : சந்திரபுரம், மட்டுவில்.

### ஐந்தாவது அகவையில்

பெயர் : ம.ஆனந்தி
முகவரி : குத்தகைக்காரன் வளவு, அல்வாய் மேற்கு.



### ஐந்தாவது அகவையில்



பெயர் : ய.வினித் றெபின்டன்
முகவரி : 9 ஆம் வட்டாரம், நெடுந்தீவு.

### ஏழாவது அகவையில்

பெயர் : அ.பிரியா
முகவரி : உயரப்புலம், ஆனைக்கோட்டை.



### ஒன்பதாவது அகவையில்



பெயர் : பா.யாதவராஜ்
முகவரி : கோப்பாய் வடக்கு, நாவற்கட்டை.

### பத்தாவது அகவையில்

பெயர் : ஜெ.ஜெனார்த்தனன்
முகவரி : 'புஸ்ப பவன்', மாலிசந்தி.



பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------

முகவரி :------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைச்



----------------
பெற்றார் ஒப்ப...


# வெள்ளம், மண்சரிவு அனர்த்தங்களுக்கு காரணங்களை கண்டறிய விசேட குழு!

## அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் நியமிக்கப்படும்

(கொழும்பு)

அண்மையில் இலங்கையின் தென்பகுதியில் ஆறு மாவட்டங்களில் ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு அனர்த்தங்களுக்கான காரணங்களைக் கண்டறிவதற்கான விசேட குழுவொன்றை அரசாங்கம் நியமிக்கவுள்ளதாகத் தெரியவருகின்றது.

சுற்றுச்சூழல் அமைச்சின் செயலாளர் ஹேவகே இந்தக்குழு அமைக்கப்படவுள்ளமை தொடர்பாக மேலும் தகவல் தெரிவிக்கையில் -

திடீரென ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு அனர்த்தங்களுக்கான காரணங்களை ஆராய நியமிக்கப்படவுள்ள இந்த விசேட செயற்குழுவிடம் இத்தகைய அனர்த்தங்கள் வருங்காலத்தில் ஏற்படுவதைத் தடுப்பதற்கான வழிமுறைகள் குறித்தும் தனது சிபார்சுகளை முன்வைக்குமாறு கோரப்படும்.

இந்தக் குழுவில் சூழலியலாளர்களையும் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

எதிர்காலத்தில் இத்தகைய இயற்கை அனர்த்தங்களிலிருந்து பாதுகாப்புத் தேடிக்கொள்வதற்கான ஆலோசனைகளை மக்களுக்கு வழங்கவும் இந்தச் செயற்குழு நடவடிக்கை எடுக்கவுள்ளது.

அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் இந்தச் செயற்குழு நியமிக்கப்படும் என்றும் ஹேவகே மேலும் தெரிவித்தார்.

# வீதி ஒழுங்கு கடைப்பிடிக்காததால் விபத்துக்கள் அதிகரிக்கின்றன!

(கொடிகாமம்)

வீதி ஒழுங்குமுறைகளைக் கடைபபிடிக்காமையினால் விபத்துக்கள் அதிகரித்து வருவதாக, சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலை வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

கடந்த இரு தினங்களில் மட்டும் ஐவர் விபத்துக்குள்ளாகிக் காயமுற்று சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

காயமுற்றவர்கள் - வண்ணாத்திப் பாலத்தடியில், பொ.விஜயலதா என்பவரும் வெள்ளாம் போக்கட்டியில், சி.பாஸ்கரன் , சிவஞானராசா ஆகியோரும் விபத்திற்கு உள்ளானதாகத் தெரியவருகிறது.

(36)

# திருமலையில் 1,000 மரக்கன்றுகள்; நடுவதற்கு பொருண்மியம் திட்டம்!

(யாழ்ப்பாணம்)

திருகோணமலையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பொருண்மிய மேம்பாட்டுப் பிரிவு, தேசிய சுற்றாடல் தினத்தை வெகுவிமரிசையாகக் கொண்டாடுவதற்கு நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது.

திருகோணமலை மாவட்டத்தில் 1000 மரக்கன்றுகளை நடவும் தீர்மானிக்கப்படுகின்றது. ஜூன் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 7 ஆம் திகதிவரை கொடிவாரம் ஒன்றினை நடத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதன்மூலம் சேகரிக்கப்படும் நிதி, மரநடுகையின் பின்னர் பராமாப்புக்குச் செலவிடப்படும் எனத் திருகோணமலை பொருண்மிய மேம்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் தர்மன் தெரிவித்தார். பாடசாலைகள், கழகங்கள், பொது அமைப்புக்கள் மத்தியில் பயன்தரு மரங்களுடன், சுற்றாடல் பாதுகாப்பு மரக்கன்றுகளும் வழங்குவதற்குத் தாம் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# படையினரின் நாய்களால் பொதுமக்களுக்கு ஆபத்து!

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் இராணுவ நிலைகளின் பாதுகாப்பிற்காக இராணுவத்தினர் வளர்க்கும் நாய்களினால் பொதுமக்களுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது.

தற்போது நிலவும் வெப்பமான காலநிலையால் நாய்களுக்கு விசர்நோய் தொற்றும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

அண்மையில் மாநகரசபை நிர்வாகத்தினர் கட்டாக்காலி நாய்களை அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டபோது, இராணுவ நிலைகளின் அண்மையில் காணப்பட்ட நாய்களை அழிக்க படைத்தரப்பு அனுமதி மறுத்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

### கஞ்சா வைத்திருந்த பெண் கைது

யாழ்.முனீஸ்வரர் கோயில் பகுதியில் சட்டவிரோதமாக 560 கிராம் கஞ்சாவை வைத்திருந்த பெண்ணொருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

யாழ்.முனீஸ்வரன் வீதியில் அமைந்துள்ள நடைபாதை வியாபாரிகளுக்கு விற்பனை செய்வதற்காகவே, இவர் இதனை வைத்திருந்தார் என்று விசாரணைகள் மூலம் தெரியவந்ததாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (சு)

# சின்னஞ்சிறு செய்திகள்

### ஆலய வருடாந்த உற்சவம்

இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவம் நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 12 நாள்கள் உற்சவம் நடைபெறும். உற்சவ சிறப்பு நிகழ்ச்சியாகத் தமிழகப் பேச்சாளர் செல்வகணபதியின் தொடர் சொற்பொழிவும் இடம்பெற்று வருகிறது.

### தமிழ்மொழித் தினப்போட்டிகள்

இந்த ஆண்டிற்கான தமிழ்த் தினப்போட்டிகள் நடைபெறும் திகதி, மாகாண கல்விப் பணிப்பாளரினால், சகல வலயப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

அதன்படி கோட்ட மட்டப் போட்டிகள் யாவும் ஜூன் மாதம் 16 ஆம் திகதிக்கு முன்னரும், வலய மட்ட இறுதிப்போட்டி ஜூன் மாதம் 17 ஆம் திகதிக்கு முன்னரும், வலய மட்ட எழுத்தாக்கப் போட்டிகள் ஜூன் மாதம் 19ஆம் திகதிக்கு முன்னரும், இசைத்திறன், நாட்டுக்கூத்து, கலைத்திறன் போட்டிகள் முறையே ஜூன் 19, 20, 21 ஆம் திகதிகளிலும் நடைபெறும்.

மாகாணமட்ட தமிழ்மொழித் தினப்போட்டிகள் ஜூலை 13 ஆம் திகதி நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (101)

### கவின் தமிழ் சிறப்புமலருக்கு ஆக்கங்கள் கோரப்படுகின்றன

வடக்கு-கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் வருடந்தோறும் வெளியிடப்பட்டுவரும் 'கவின தமிழ் சிறப்பு மலர்' இவ்வருடமும் பாடசாலை எழுத்தாளர், கவிஞர்கள், ஓவியர்களின் ஆக்கங்களைத் தாங்கி வெளிவரவுள்ளது.

இதற்கான ஆக்கங்களை ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர்-என்.அனந்தராஜ், உதவிக் கல்விப் பணிப்பாளர், தமிழ்மொழிப்பிரிவு, மாகாண கல்வித் திணைக்களம், திருகோணமலை என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களைப் பெற விரும்புவோர் வலயக்கல்விப் பணிப்பாளருடன் (தமிழ்மொழி) தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும். (101)

# நிதியுதவி வழங்கப்படாததால் மகாபொல இடைநிறுத்தப்படலாம்

ஜனாதிபதி நிதியத்தினூடாக மகாபொல நிதியத்துக்குக் கிடைக்க வேண்டிய 700 மில்லியன் ரூபா இன்னமும் வழங்கப்படாததால், பல்கலைக்கழக மாணவர்களுக்கான மகாபொல கொடுப்பனவை வழங்குவதில் பெரும் சிக்கல் எழுந்திருப்பதாக, வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த ஐந்து வருடங்களில் மகாபொல நம்பிக்கை நிதியத்துக்கு 1.5 பில்லியன் ரூபா நிதி கிடைத்திருக்கவேண்டும். எனினும், 825 மில்லியன் ரூபா மட்டுமே ஜனாதிபதி நிதியத்தினால் வழங்கப்பட்டிருக்கிறது என மேற்படி நிதியத்தின் பணிப்பாளர் ஷாமிலா பெரேரா தெரிவித்தார்.

அபிவிருத்தி லொத்தர்சபையிலிருந்து கிடைக்கின்ற இலாபத்தில் ஐம்பது வீதம் மகாபொல நிதியத்துக்கு வழங்கப்படவேண்டும் என்பதே நியதி. இந்த நிதி - ஜனாதிபதி நிதியத்தினூடாகவே வழங்கப்பட்டு வருகின்றது.

கடந்த நான்கு வருடங்களாக இந்த நிதி மகாபொல நிதியத்துக்கு சீராகக் கிடைத்தால், புலமைப் பரிசில் பெறும் மாணவர்கள் தொகையை அதிகரிக்க முடியாதநிலை ஏற்பட்டிருப்பதாக மகாபொல நிதியப் பணிப்பாளர் ஷாமிலா பெரேரா தெரிவித்தார்.

ஒரு கல்வியாண்டில் 63 வீதமான உயர்கல்வி மாணவர்களுக்கு மகாபொல புலமைப்பரிசில் வழங்கப்பட்டு வருகிறது. இந்த வருடத்தில் 36 வீதமாகக் குறைவடைந்துள்ளது.

கடந்த ஐந்து வருடங்களில் மட்டும் மகாபொல நிதியத்துக்கு 1.5 மில்லியன் ரூபா கிடைக்கவேண்டியுள்ளது. இதில் 54 வீதமான நிதியே கிடைக்கப்பெற்றுள்ளது. மீதியாகவுள்ள 46 வீதமான நிதி ஜனாதிபதி நிதியத்தில் முடங்கிப்போயிருக்கிறது. இதனால், இவ்வருடம் இரு அணிகளைப் பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கும்போதும் மகாபொல கொடுப்பனவுகளை வழங்க முடியாதநிலை ஏற்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# பிலிப்பைன்ஸ் மணிலா வளைகுடாவில் இரு படகுகள் நேருக்கு நேர் மோதின!

## 17 பயணிகள் பலியானதாக அச்சம்

(மணிலா)

பிலிப்பைன்சில் - இரண்டு படகுகள் (Ferries) ஒன்றுடனொன்று மோதிக்கொண்டதில் பதினேழு பயணிகள் கொல்லப்பட்டிருக்கலாமென அஞ்சப்படுகின்றது.

மணிலா வளைகுடாவில் - கொரிஜிடோர் தீவருகே இந்த அனர்த்தம் நேற்றுப் பகல் நிகழ்ந்தது.

200 பயணிகளுடன் சென்ற, மரத்தால் செய்யப்பட்ட படகு - இன்னொரு படகுடன் மோதியதில் இந்த விபத்து நிகழ்ந்ததாகத் தெரிவிக்கும் பிலிப்பைன்சின் கரையோரக் காவற்படை அதிகாரிகள் -

கடும் மழையும், காற்றுமே இந்த விபத்துக்குக் காரணம் எனக் கூறியுள்ளனர்.

7000 இக்கும் அதிகமான தீவுகளைக் கொண்டிருக்கும் பிலிப்பைன்சில் - தீவுகளுக்கிடையிலான போக்குவரத்துக் களுக்கு, படகுகளே பிரதான மார்க்கம் என்பது குறிப்பிடத் தக்கது.



காப்பாற்றப்பட்ட வயோதிப மாது ஒருவர்.

# பெண்களுக்கான உடைகள்; ஈரானில் மீண்டும் இறுக்கம்!

ஈரானில், பெண்கள் அணியும் உடலை மூடும் 'பர்தா'உடைகளில்- இஸ்லாமியச் சட்டத்திற்கு முரணாக மாற்றங்கள் எதனையும் செய்யக்



கூடாதென, அரசாங்கம் கடுமையான உத்தரவு பிறப்பித்துள்ளது.

அண்மைக்காலமாக - ஈரானியப் பெண்கள், தமது உடைகளில் சற்றே தளர்வுகளைச் செய்ய ஆரம்பித் தனர். கறுப்பு நிறத்திலான பர்தாவுக் குப் பதிலாக - வேறு நிறங்களும் பயன்படுத்தப்பட்டன.

இந்த மாற்றத்தை மதவாதிகள் கடுமையாக எதிர்த்ததைத் தொடர்ந்து- சுட்டெரிக்கும் கோடையையும் பொருட்படுத்தாது, முற்றுமுழுதாக- இஸ்லாமியச் சட்டத்தின்படியே 'பர்தா' அணியுமாறு அந்நாட்டரசு உத்தரவிட்டிருக்கிறது.

உடைகளை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்களில் சோதனை களைச் செய்த ஈரானியப் பொலி ஸார், கடை உரிமையாளர்களுக்கு, வேறு உடைகளை விற்கக்கூடா தென எச்சரிக்கையும் விடுத்துள் ளனர்.

# மும்பாய் விமானநிலையத்தில் நடந்த திடீர் கடத்தல் நாடகம்

## உயர் பொலிஸ் அதிகாரியும் சுடப்பட்டார்

மும்பாய் விமான நிலையத்தில் கடமையாற்றும் பாதுகாவலர் ஒருவர், அங்கு உயர் பொலிஸ் அதிகாரியொருவரை சுட்டுக்கொன்றார்.

மத்திய தொழில் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த அந்த உயரதிகாரியே, மும்பாய் விமான நிலையத்தின் பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருந்தார்.

இவரைச் சுட்ட மேற்படி பாதுகாவலர், விமான நிலையத்திலிருந்த ஐந்து பெண்களையும், ஒரு ஆணையும் பணயக்கைதிகளாப் பிடித்துச் சென்று - ஒரு மணிநேரம் தடுத்து வைத்திருந்தபின், அவர்களை விடுவித்தார்.



பொலிஸாரிடம் சரணடைந்திருக்கும் கொலையாளி, எதற்காக இந்தச் செயலைச் செய்தார் என்று உடனடியாகத் தெரியவில்லை என பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# கனடாவில் 'சார்ஸ்' நோய் தீவிரம்; மேலும் இருவர் பலி; மக்கள் அச்சம்!



கனடாவின் ரோரான்ரோ நகரில் 'சார்ஸ்' நோய்த் தாக்கத்திற்காளான இரண்டுபேர் பலியானதைத் தொடர்ந்து - அங்கு மக்களிடையே அச்சம் எழுந்துள்ளது.

ரோரான்ரோ நகருக்குச் செல்வதைத் தவிர்க்கும்படி, உலக சுகாதார ஸ்தாபனம் வேண்டுகோள் விடுத்த 10 நாட்களுக்குள், இந்த மரணங்கள் நிகழ்ந்துள்ளன.

ஒன்ராரியோ மாநிலம் முழுவதையும் கண்காணிப் புக்குட்பட்ட பகுதிகளாகப் பிரித்திருக்கும் கனேடிய சுகாதார அதிகாரிகள் - இனிவரும் நாட்களில் 'சார்ஸ்' மேலும் பரவலாமெனவும் எச்சரித்துள்ளனர்.

ரோரான்ரோவிலுள்ள இரண்டு வைத்தியசாலைகள் 'சார்ஸ்' நோயாளிகளுக்கெனத் தனியாக ஒதுக்கப் பட்டிருப்பதோடு - அங்கு பணியாற்றும் வைத்தியர்களுக்கும், மருத்துவ தாதிகளுக்கும் விசேட பாதுகாப்புக் கவசங்களும் அளிக்கப்பட்டிருக்கின்றன.

உடலை மூடிய கவச உடைகளையும் இரண்டு கையுறைகளையும் ஒன்றன்மேல் ஒன்றாக அணிந்தவாறு அவர்கள் காணப்படுகின்றனர்.

, ஆசியாவுக்கு வெளியே, 'சார்ஸ்' பரவியுள்ள ஒரே இடமான கனடாவில் - இதுவரை 24 பேர் பலியானதாக, உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

ஆயினும் - மக்களைப் பீதியடைய வேண்டாமென்றே, கனேடிய சுகாதார அதிகாரிகள் கோரிவருகின்றனர்.

கடந்த ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதிக்குப் பின்னர், புதிதாக 'சார்ஸ்' நோய் பாதித்ததாக எவரும் இனங் காணப்படவில்லையென்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

ரோரான்ரோவில், இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து சென்ற தமிழர்கள் அங்கு அதிகளவில் வசித்து வருவது குறிப்பிடத்தக்கது.

# களத்திலிருந்து காயலான் கடைக்கு!







ஈராக்கிய ராணுவம் போரில் பயன்படுத்திய வாகனங்களும் ஆயுத தளபாடங்களும் இன்று பக்தாத்தில் ஓர் இடத்தில் குவிக்கப்பட் டுள்ளன. அவற்றை முதல் இரண்டு படங்களிலும் காணலாம். மூன்றாவது படத்தில் - விமான எதிர்ப்புத் துப்பாக்கி ஒன்றை இரும்புத் தேவைக்காக கழற்றும் ஈராக்கியர் ஒருவரைக் காணலாம்.



அல்ஜீரிய பூகம்பத் துயரத்தின் ஒரு சாட்சி இது.

## உலகவலம்

### பஸ்ரா நகரில் பிரிட்டிஷ் நிர்வாகம்

ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரான பஸ்ராவில் - ஈராக்கியர் களைக் கொண்டிருந்த நிர்வாக அமைப்பை நீக்கிவிட்டு, தனது நாட்டு இராணுவத் தளபதி ஒருவரின் தலைமையில், இடைக்கால நிர்வாகக் குழுவை - பிரிட்டிஷ் அரசு அமைத்திருக்கிறது.

இதற்கு, பஸ்ராவிலுள்ள மக்களிடையே கடும் எதிர்ப்புணர்வு கிளம்பியிருக்கிறது.

# அல்ஜீரியாவில் மீட்புப் பணிகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டன



(அல்ஜீயர்ஸ்)

அல்ஜீரியாவில் இடம்பெற்ற பாரிய பூமியதிர்ச்சியில் கொல்லப்பட்டவர்களைத் தேடி மீட்கும் பணிகளை- சர்வதேச மீட்புப்பணியாளர்கள் முடிவுக்கு கொண்டு வந்துள்ளனர்.

சப்ரீனா என்ற பதினொரு வயதுச் சிறுமி - பெரும் மாடிக் கட்டட இடிபாடுகளுக்குள்ளிலிருந்து இறுதியாக மீட்கப்பட்டதைத் தொடர்ந்து - இனிமேலும் , கட்டட இடிபாடுகளுக்குள் உயிரோடு யாரும் இருக்கமாட்டார் கள் என்ற நிலையில் - மீட்புப் பணிகள் முடிவுக்கு வந்திருக்கின்றன.

இந்தப் பாரிய பூமியதிர்ச்சியில் ஏற்பட்ட சேதங்களை அல்ஜீரிய உள்துறை அமைச்சு வெளியிட்டிருக்கிறது. 2,047 பேர் பலியானதாகவும், 8,629 பேர் படுகாயமுற்றதாகவும் தெரிவித்த உள்துறை அமைச்சு அதிகாரிகள்- காணாமற்போனோரையும் சேர்த்து - மூவாயிரம் பேர் உயிர் இழந்திருக்கலாம் என அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை - அரசாங்கம், தற்காலிகமாக வீடுகளை அமைத்துத் தருவதில் தாமதம் காட்டுவதால் - பாதிக் கப்பட்ட மக்கள் இன்னமும் திறந்த வெளிகளிலேயே தங்கியுள்ளனர்.

தமக்குரிய உடனடி உதவிகளைச் செய்துதரத் தாமதிக்கும் அல்ஜீரிய அரசாங்கத்தின் மீது கோபமடைந்துள்ள பொதுமக்கள் - கடந்த சனியன்று, அல்ஜீரிய ஜனாதிபதி சென்ற வாகன அணி மீது கற்களை வீசித் தாக்கி, தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கண்காணிப்பாளர் இருக்கும் படகுகளில் குழுவின் கொடி பறக்க விடப்படவேண்டும்!

## ஜெனரல் ரெலவ்சன் அரசுக்கு கடிதம்

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகள் இருக்கும் கடற்படைப் படகுகளில், கண்காணிப்புக்குழுவின் கொடி பறக்கவிடப்படவேண்டும் என்று, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஜெனரல் ரெலவ்சன் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக, ஜெனரல் ரெலவ்சன், அரசின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் பேனாட் குணதிலகவுக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

இதுவரை காலமும், கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகள் இருக்கும் கடற்படைப் படகுகள், பிரச்சினைக்குரிய பகுதிகளுக்குச் செல்லும் பொழுது மட்டுமே, கண்காணிப்புக் குழுவின் கொடி பறக்கவிடப்படுவது வழமையாகும்.

இனிவரும் காலங்களில், கண்காணிப்புக்குழுவினர் பயணம் செய்யும் கடற்படைப் படகுகளில், எந்தநேரமும் கொடி பறக்கவிடப்படவேண்டும் என்று ரெலவ்சன் கேட்டுள்ளார்.

புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைவாகவே, தாம் இக்கோரிக்கையை விடுத்துள்ளதாக கூறியுள்ள ஜெனரல் ரெலவ்சன் - கண்காணிப்புக்குழுவினர் இருக்கும் கடற்படைப் படகுகளில் இரவு நேரத்தில் கொடியை அடையாளம் காட்டும் வகையில் ஒளியூட்டப்படவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

கண்காணிப்புக் குழுவினரின் பாதுகாப்புக்கு, மிகவும் அவசியமான தேவையாக இது இருப்பதாகவும் அதில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த கடிதத்தின் பிரதிகள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, கடற்படைத் தளபதி தயா சந்தகிரி ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# அமைச்சர் ரவூப் ஹக்கீம் நோர்வேக்குப் பயணம்!

அமைச்சர் ரவூப் ஹக்கீம், நோர்வேக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

நேற்றுக்காலை அமைச்சர் ரவூப் ஹக்கீம் நோர்வே சென்றடைந்தார். நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சனுடன், அவர் பேச்சுவார்த்தைகளை நடத்தவிருப்பதாக தெரியவருகிறது.

ரோக்கியோவில் அடுத்த மாதம் ஆரம்பமாக இருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் பற்றி, முக்கியமாக ஆராயப்படுமென்று தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர் ஹக்கீம் தனது நோர்வே விஜயத்தின் போது, அந்த நாட்டின் துறைமுகங்களைப் பார்வையிடுவார் எனவும் தெரியவருகிறது.

அவர் நோர்வே புறப்படுவதற்கு முன்னர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அமைச்சர் ஜி.எல். பீரிஸ் ஆகியோரைச் சந்தித்தும் உரையாடியுள்ளார். (01)

# பொலிஸ் சோதனைகள் மட்டக்களப்பில் அதிகரிப்பு!

மட்டக்களப்பில் - அண்மைக்காலங்களில் இடம்பெற்ற கொலைச் சம்பவங்களையடுத்து, பொலிஸார் சோதனை நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரவு நேரங்களில் பொலிஸாரின், இந்தச் சோதனைகள் இடம்பெறுகின்றன. குறிப்பாக, மோட்டார் சைக்கிள்களில் செல்பவர்கள் மீது பொலிஸார் கூடிய கவனம் செலுத்துவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சோதனையின் போது, தலைக்கவசத்தைக் கழற்றுமாறு கோரும் பொலிஸார், உடற்சோதனையை மேறகொள்வதுடன், ஆவணங்களையும் பரிசீலித்து வருகின்றனர். இந்தச் சோதனைக் கெடுபிடிகளால், பொது மக்கள் இரவு நடமாட்டத்தை தவிர்த்துக் கொள்வதாகத் தெரியவருகிறது.

இதேவேளை - மட்டக்களப்புப் பிரதேசத்தில் உள்ள தமிழ்க் குழுக்களின் முகாம்களுக்கும் மேலதிக பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி...

விரும்பியே பிரதமர் இந்தச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, இடைக்கால நிர்வாக சபைக் கோரிக்கையை தாம் நிராகரிப்பதாக வெளிநாட்டுச் செய்தியாளரிடம் தெரிவித்திருந்தார்.

இந்தச் சூழ்நிலையிலேயே பிரதமர் ரணில், ஜனாதிபதியைச் சந்திக்க விருப்பம் தெரிவித்துள்ளார்.

ரோக்கியோ மாநாட்டில் விடுதலைப் புலிகளைப் பங்குபற்றச் செய்ய வேண்டுமானால், வட-கிழக்கில் இடைக்கால நிர்வாகசபை தொடர்பாக அரசாங்கம் உறுதியான பதிலை புலிகளுக்கு வழங்கவேண்டும். இந்த நிலையில் அரசின் பதிலை ராஜதந்திர வட்டாரங்களும் ஆவலுடன் எதிர்பார்த்துள்ளன.

# ரஷ்யப்பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஆயுத வியாபாரியுடன் சந்திப்பு!

(கொழும்பு)

ரஷ்யப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர், கொழும்பு வந்திருந்தபோது, இங்குள்ள சூதாட்ட விடுதி உரிமையாளர் ஒருவருடன் இரகசியப் பேச்சுக்களை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சூதாட்ட விடுதியை வைத்திருக்கும் முன்னாள் ஆயுத வியாபாரியான வர்த்தகரை, 'ஹில்டன் ஹோட்டேலில்' ரஷ்யப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் மிகையில் ரெலிகேவ, சந்தித்துப் பேசினார்.

இதையடுத்து, இருவரும் கடந்த வெள்ளிக்கிழமை மாலை தனிப்பட்ட இடமொன்றில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல, முன்னாள் இராணுவத் தலைமை அதிகாரி ஜானக பெரேரா ஆகியோர் குற்றச்சாட்டுக்குள்ளாகியிருக்கும் - வெப்பஈர்ப்பு ஆயுத ஊழலுக்கும், மேற்படி வியாபாரிக்கும் இடையில் சம்பந்தம் இருப்பதாகச் செய்திகள் வெளியாகியிருந்தது குறிப்பிடத்தக்கது.

இருவருக்கும் இடையில் இடம்பெற்ற நீண்ட கலந்துரையாடல் குறித்த விபரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை

# கோட்டை உயர் பாதுகாப்பு...

அவர் உயிரிழந்தார். இவரது உடலில் ஐந்து துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் இருந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொல்லப்பட்ட அமைச்சர் ரஞ்சித், சட்டவிரோதமாக ஆயுதம் வைத்திருந்த குற்றச்சாட்டின்பேரில் கைதாகி, நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

குற்றப்புலனாய்வுப் பிரிவு அலுவலகத்துக்குச் சென்றுவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்த வேளையிலேயே இவரை, வாகனம் ஒன்றில் வந்த ஆயுதக்குழுவினர் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு - கோட்டைப் பகுதியில், ஜனாதிபதி மாளிகை, புனர்வாழ்வு அமைச்சின் அலுவலகம், குற்றப்புலனாய்வுத் திணைக்களம் என்பன அமைந்துள்ள - அதிஉச்சப் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டு, பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ள இடத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தப் பகுதியில் இனந்தெரியாத ஆயுதக் குழுவினால் நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம், அரசியற் தலைவர்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சம்பவத்தையடுத்து, இந்தப் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன், பொலிஸார் தேடுதல் நடவடிக்கையையும் மேற்கொண்டு வருகின்றனர். (01)

## உதவி...

விடுதலைப் புலிகள் சிங்கள மக்களுக்கு எதிரானவர்கள் அல்ல, என்ற கருத்தை நாம் அவர்களிடம் தெளிவாக முன்வைத்திருக்கின்றோம். அத்துடன், தென்னிலங்கை அரசியலில் சுயலாபத்துடன் சிலர் ஈடுபட்டு வருகின்றனர். சிங்கள மக்கள்தான் இவர்களை முறியடிக்க வேண்டும் என நாம் கேட்டோம் என்றும், எழிலன் தெரிவித்தார்.

நாம் கேட்பது தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளையேயாகும். என்பதை சிங்களக் கிராம மக்களை சந்தித்தபோது, எடுத்துக் கூறினோம். தமிழ் மக்களுக்கு நியாயமானதும், நீதியானதுமான தீர்வு கிடைக்க வேண்டும் என்ற உணர்வு அவர்களிடமும் மேலோங்கியிருப்பதைத் எங்களால் அறியமுடிந்தது என எழிலன் மேலும் தெரிவித்தார்.

# ஏ-9 வீதியிலுள்ள கண்ணிகளை விசேட அணி அகற்றுகின்றது!

(கிளிநொச்சி)

ஏ.9 வீதியில் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளை, விரைவாக அகற்றுவதற்காக 18 பேர் அடங்கிய விசேட அணி ஒன்று ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

கண்டி வீதியைப் புனரமைப்பதற்கு வசதியாகவே, இந்த விசேட அணி ஈடுபடுத்தப்பட்டு கண்ணிகளை அகற்றும் பணி துரிதமாக நடைபெற்றுவருகின்றது.

தற்போது இவர்கள் பரந்தனுக்கு வடக்கே இயக்கச்சிவரையுள்ள பகுதியில், உள்ள மிதிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். கண்டி வீதியின் ஏனைய பகுதியில் அடுத்த கட்டமாக, கண்ணிவெடிகளை அகற்றும் பணி நடைபெறும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஏ-9 வீதியில் கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை, பிரிட்டன் கண்ணிவெடி தொடர்பான அமைப்பு, நோர்வே மக்கள் அமைப்பு ஆகியன கண்ணிவெடிகளை அகற்றுவோருக்கான பயிற்சிகளையும், மருத்துவ வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதற்கு முன்வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## இடைக்கால நிர்வாகக்...

வும், காலம் சென்ற சௌமியமூர்த்தி தொண்டமான் கடந்த காலங்களில் அரசுக்கு வலியுறுத்தி இருந்தார்.

அவரது தீர்க்கதரிசனமான இந்த யோசனை செயல்வடிவம் பெற வேண்டிய காலம் வந்துவிட்டது. இந்த வடிவமைப்பு அன்றே செயற்

சமாதான முயற்சி விடயத்தில், அரசாங்கம் எடுக்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தனது பூரண ஆதரவை வழங்கும் என்றும் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்ததாக இ.தொ.கா. வெளியிட்டுள்ள அறிக்கையில்



லன் மேலும் தெரிவித்தார்.

RAMCO CEMENT

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ராம்கோ சீமெந்து

SLS - 107 அங்கீகாரம் பெற்றது
ISO - 9002 தரம் பெற்றது
BSS - 12 - 1991 தரத்திற்கு அமைவானது

ஆசியாவில் முதலாம்தர (நம்பர் - 1) தொழிற்சாலையாக தெரிவுசெய்யப்பட்ட தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் RAMCO சீமெந்து (கோபுரம் மார்க்) என்பதை மக்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குறிப்பு : தற்போது ராம்கோ சீமெந்து பருத்தித்துறை இறங்குதுறையில் இறக்கப்பட்டுக்கொண்டுள்ளது.

எமது நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்ட பார ஊர்திகளை இன்று காலை 06.00 மணிக்கு பருத்தித்துறை இறங்குதுறைக்கு கொண்டு செல்லுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

முன் கூட்டியே பதிவு செய்பவர்களுக்கு
முன்னுரிமை அடிப்படையில் நேரடியாக விநியோகிக்கப்படும்.

ராம்கோ சீமெந்து ஏக இறக்குமதியாளர்கள்

ஈஸ்வரபகவான் & கொம்பனி

91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

T.P. No - 021 222 2350

(சி-956)

மூர்த்தி தொண்டமான் கடந்த காலங்களில் அரசுக்கு வலியுறுத்தி இருந்தார்.

அவரது தீர்க்கதரிசனமான இந்த யோசனை செயல்வடிவம் பெற வேண்டிய காலம் வந்துவிட்டது. இந்த வடிவமைப்பு அன்றே செயற்படுத்தப்பட்டிருக்குமாயின், பாரிய அனர்த்தங்களையும், உயிரிழப்புக்களையும், பொருளாதார சீர்கேடுகளையும் நாடு எதிர்நோக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது என்றும் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் கூறியுள்ளார்.

அரசாங்கம் எடுக்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தனது பூரண ஆதரவை வழங்கும் என்றும் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்ததாக இ.தொ.கா. வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அரசின்....

மறுப்புத் தெரிவித்த அவர், புலிகளுக்கான இந்தப் பதிலில், அரசின் நிலைப்பாடுகள் தெளிவாக உள்ளடக்கப்படும் எனத் தெரிவித்தார்.

## தென்பகுதி மக்களுக்கு...

நாடுகளில் பரந்து வாழும் தமிழர்கள் ஒன்றுபட்டு நிற்கும்போது, இந்த நாட்டுக்குள் உள்ள நாம் ஏன் இணைந்து ஒற்றுமையுடன் செயற்படக்கூடாது எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

விடுதலைப் புலிகள் மலையகத் தமிழர்களுக்காகவும் குரல் கொடுக்க வேண்டும். அவ்வாறு செய்வதாக அவர்கள் உறுதியளித்துள்ளனர்.

மலையகம் மற்றும் தென்பகுதி வந்துள்ள புலிகளுக்கு இங்குள்ள மக்கள் காட்டிவரும் வரவேற்பும், ஆதரவும் மெய்சிலிர்க்கச் செய்கிறது எனவும் அமைச்சர் சந்திரசேகரன் மேலும் குறிப்பிட்டார்.

## சொல்ஹெய்ம் கொழும்பு...

இவர், உடனடியாகவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து நீண்ட நேரம் பேச்சுக்களை நடத்தியதாகத் தெரியவருகிறது. இந்தச் சந்திப்பின்போது - அமைச்சர்கள் ஜி.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட ஆகியோர் பிரதமருடன் இருந்தனர்.

இடைக்கால நிர்வாகம் தொடர்பாகப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பிய கடிதம் குறித்து, இந்தச் சந்திப்பின்போது விரிவாக ஆராயப்பட்டதாகக் கூறப்படுகிறது.

எனினும், இந்தச் சந்திப்பின் போது, பேசப்பட்ட விடயங்கள் குறித்து உத்தியோகபூர்வத் தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

இதேவேளை - நோர்வே விசேட தூதுவர், இன்று அல்லது நாளை வன்னிக்குச் சென்று விடுதலைப் புலிகளின் பிரமுகர்களுடன் பேச்சுக்களை நடத்தவிருப்பதாகத் தெரிவருகிறது!.

இடைக்கால நிர்வாக அமைப்பு ஒன்றை அமைப்பது தொடர்பாக, முக்கியமான கலந்துரையாடலை நடத்துவதற்கே நோர்வேயிலிருந்து எரிக் சொல்ஹெய்ம் இலங்கைக்கு வந்திருப்பதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டது.

(200,01)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 26.05.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.